# எங்கள் அப்பா செல்லப்பா



அமரர்.

# கதிரவேலு இளையதம்பி

(கண்ணகை அம்மன் ஆலய பிரதம பூசகர்)

திதி நிர்ணய வெண்பா

விளம்பி எனுமாண்டு கதிரவேலு – இளையதம்பி
சீரான சித்திரை மாத ஸப்தமிதிதியில் – சீரோங்கு
நாளான ஞாயிறுமாலை ஆறு பதினைந்திற்கு
கார்குழலாள் கண்ணகை கழலடி ஏகினார்காண்



அன்னை மடியில்

**31.10.1931**

அரனாரடியில்

**06.05.2018**

# சமர்ப்பணம்

குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்து

அன்போடும் பண்போடும்

பாசத்தோடும் பேணிப்பாதுகாத்து

எம்மையெல்லாம் நல்வழிநடாத்தி

இன்று வானுறையும் தெய்வமாகிவிட்ட

எங்கள் அன்பு தெய்வத்தின்

பொன்னடிகளில் காணிக்கையாக

இந் நினைவு மலரினைச்

சமர்ப்பிக்கின்றோம்



**இவ்வண்ணம்**

**குடும்பத்தினர்**

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# விநாயகர் தோத்திரம்

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகந்தனை ஞானக்கொழுந்தினைப்
புந்தியில் வைத்துஅடி போற்றுகின்றேனே.

## பஞ்சபுராணம்

## தேவாரம்

சங்கரனே நின்பாதம் போற்றி போற்றி
சதாசிவனே நின்பாதம் போற்றி போற்றி
பொங்கரவா நின்பாதம் போற்றி போற்றி
புண்ணியனே நின்பாதம் போற்றி போற்றி
அங்கமலத் தயனோடு மாலுங்காணா
அனலுருவா நின்பாதம் போற்றி போற்றி
செங்கமலத் திருப்பாதம் போற்றி போற்றி
திருமூலட்டானனே போற்றி போற்றி



## திருவாசகம்

சோதியே, சுடரே, சூழொளி விளக்கே
சுரிகுழற் பணைமுலை மடந்தை
பாதியே பரனே பால்கொள் வெண்ணீற்றாய்
பங்கயத் தயனுமா லறியா
நீதியே செல்வத் திருப்பெருந்துறையில்
நிறைமலர்க் குருந்தமே வியசீர்
ஆதியே அடியேன் ஆதரித்தழைத்தால்
அதெந்துவே என்றருளாயே

## திருவிசைப்பா

களையா உடலொரு சேரமான் ஆ ரூரன்
விளையா மதமாற வெள்ளானை மேற்கொள்ள
முளையா மதிசூடி மூவாயிரவோடும்
அணையா விளையாடும் அம்பலத்தின் ஆடரங்கே

## திருப்பல்லாண்டு

குழலொலி யாலொளி கூத்தொலி யேத்தொலி
எங்கும் குழாம் பெருகி
விழாவொலி விண்ணளவுஞ் சென்று விம்மி
மிகு திருவாரூளில்
மழவிடையார்க்கு வழி வழி யானாய்
மணஞ் செய் குடிப்பிறந்த
பழவடி யாரொடும் கூடி யெம் மானுக்கே
புல்லாண்டு கூறுதுமே

# திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை யென்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்துபாடி
அறவாநீ ஆடும்போதுன் அடியின் கீழ் இருக்க என்றார்

# திருப்புகழ்

| | | |
|---|---|---|
| கருப்பற் றூறிப் | – | பிறவாதே |
| கனக்கப் பாடுற் | – | றுழலாதே |
| திருப்பொற் பாதந் | – | தனு பூதி |
| சிறக்கப் பாலித் | – | தருள் வாயே |
| பரப்பற் றாருக் | – | குரியோனே |
| பரத்துப் பாலுக் | – | கணியோனே |
| திருக்கைச் சேவற் | – | கொடியோனே |
| செகத்திற் சோதிப் | – | பெருமானே |



# வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

# பட்டினத்தார் பாடல்கள்

1. எருவாய்க்கு இரு விரல்மேல் ஏர் உண்டு இருக்கும்
கருவாய்க்கோ கண்கலக்கப்பட்டாய் - திருஆரூர்த்
தேர் ஓடும் வீதியிலே செத்துக்கிடக்கின்றாய்
நீர் ஓடும் தாரைக்கேநீ

2. மாதா உடல் சலித்தாள் வல்வினையேன் கால்சலித்தேன்
வேதாவும் கைசலித்து விட்டானே - நாதா
இருபையூர் வாழ்சிவனேன இன்னம் ஓர் அன்னைக்
கருப்பை ஊர் வாராமல் கா

3. இருப்பது பொய் போவது மெய் என்று எண்ணி நெஞ்சே
ஒருத்தருக்கும் தீங்கினை உன்னாதே - பருத்ததொந்தி
நம்மது என்று நாம் இருப்ப நாய்நரிகள் பேய்கழுகு
தம்மது என்று தாம் இருக்கும் தான்

4. மாலைப்பொழுதில் நறு மஞ்சள் அரைத்தே குளித்து
வேலை மினக்கிட்டு விழித்து இருந்து - சூல்ஆகிப்
பெற்றாள் வளர்த்தாள் பெயரிட்டாள் - பெற்றபிள்ளை
பித்து ஆனால் என் செய்வாள் பின்

# அன்னையர்க்கு இறுதிக்கடன் செய்யும் பொழுது பாடியவை

5. ஐயிரண்டு திங்களா அங்கமெலாம் நொந்துபெற்றுப்
பையல் என்ற போதே பரிந்து எடுத்துச் - செய்ய இரு
கைப்புறத்தில் ஏந்திக் கனகமுலை தந்தாளை
எப்பிறப்பில் காண்பேன் இனி

6. முந்தித் தவம் கிடந்து முந்நூறு நாள் சுமந்தே
அந்திபக லாச்சிவனை ஆதரித்துத் தொந்தி
சரியச் சுமந்து பெற்ற தாயார் தமகோ
எரியத் தழல் மூட்டுவேன்

7. வட்டிலிலும் தொட்டிலிலும் மார்மேலும் தோள் மேலும்
கட்டிலிலும் வைத்து என்னைக் காதலித்து - முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டும் தாய்க்கோ
விறகிலிட்டுத் தீமூட்டுவேன்

8. நொந்து சுமந்து பெற்று நோவாமல் ஏந்திமுலை
தந்து வளர்த்து எடுத்துத் தாழாமே - அந்திபகல்
கையிலே கொண்டு என்னைக் காப்பாற்றும்
தாய்தனக்கோ மெய்யிலே தீ மூட்டுவேன்

9. அரிசியோ நான் இடுவேன் ஆத்தாள் தனக்கு
வரிசை இட்டுப்பார்த்து மகிழாமல் - உருசி உள்ள
தேனே அமிர்தமே செல்வத்திரவியப் பூ
மகனே என அழைத்த வாய்க்கு

அள்ளி இடுவது அரிசியோ தாய்தலைமேல்
கொள்ளிதனை வைப்பேனோ கூசாமல் - மெல்ல
முகமேல் முகம் வைத்து முத்தாடி என்றன
மகனே என அழைத்த வாய்க்கு

11. முன்னை இட்ட தீ முப்புரத்திலே
பின்னை இட்ட தீ தென்இலங்கையில்
அன்னை இட்ட தீ அடிவயிற்றிலே
யானும் இட்ட தீ மூள்க மூள்கவே

12. வேகுதே தீஅதனில் வெந்து பொடி சாம்பல்
ஆகுதே பாவியேன் ஐயகோ - மாகக்
குருவி பறவாமல் கோதாட்டி என்னைக்
கருதி வளர்த்து எடுத்த கை

13. வெந்தாளோ சோணகிரி வித்தகா நின்பதத்தில்
வந்தாளோ என்னை மறந்தாளோ - சந்ததமும்
உன்னையே நோக்கி உகந்து வரம் கிடந்தென்
தன்னையே ஈன்றெடுத்ததால்

14. வீற்றிருந்தாள் அன்னை வீதிதனில் இருந்தாள்
நேற்று இருந்தாள் இன்று வெந்து நீறு ஆனாள் பால்தெளிக்க
எல்லீரும் வாருங்கள் ஏது என்று இரங்காமல்
எல்லாம் சிவமயமேயாம்

# கண்ணகி அம்மன் கும்மிப்பாடல்



1 விக்கினங்கள் தீர்க்கும் விநாயகரே
உன்னை வேண்டினேன் இவ்விடம் வாருமென்று
இக்கதி செய்யாத வினைகளைத் தீர்த்து
இவ்விடம் வந்து அருள்புரிவாய்

2\. சுந்தரி மாரி மக மாயி
அன்புள்ள கண்ணகைத் தயாரே
செந்தமிழால் கும்பிப் பாட்டு நான் பாடிட
சித்தி விநாயகர் காப்பாமே

3\. ஆதியில் வந்த தமிழ் மாறன்
விழி அன்புமே கண்டு மகிழ்ந்தெழுந்த
சோதி சிவனிடம் நீதி வரம் பெற்ற
சுந்தரிக் கண்ணகைத் தாயாரே

4\. இந்திர லோகமும் பூலோகம்
எங்கும் புலந்திடும் கண்ணகையாள்
பைங்கொடி பாண்டியன் தன்னை வாதத் திட்ட
கண்ணகை வாறாள் கும்மியடி

5\. ஈஸ்வரன் தன்னை வரம் கேட்டு
இப்புவி யாண்டதோர் பாண்டியனும்
பாரிலொருகள் மறைக்கவென்றெண்ணிலே
பாங்குடன் மாங்கனியாய் யிருந்தாள்

# கண்ணகி அம்மன் காவியம்

1. திரு மருவு கயிலாய மலையின் மிசை நிலவுபுனை
சிவனுமை யவளுமொரு சிம்மாசனத்தில்
மருவுபொரு துமையவனெருந்தடி பணிந்து
வள்ளலே மதிமரபில் வந்த தமிழ் மாறன்
வெருவுதலிலாமலே விருநுதலில் விழிகண்டு
வெட்சினேனது துயர் நீங்க விடையருளுமென்ன
தருமருவு மிதழுபுனை தர்மசேகரனும்
தையலுள் மனநினைவு தான் முயலுமென்றார்

2. முயலுமென விடைகொடா தவசிடையிருந்து
முயல்வடுவில் மதியனைய முகமலர் சிறந்து
அயலில் வரும் நாகமங் கலையெனும் மணங்கை
அன்பினுடனே திருக்கண்ணகுள் சுரந்து
புயலைமுன் நான் விலங் கிட்டதிறன் வழுதிதன்
பொன்னிலவு நெற்றியிற்த கண்ணை மறையென்ன
மயலறவுரைத்திலகு சட்டை கனல் கொடு வந்து
மணிமுடித்தரசர் மதுரையெரியென்றார்

3. என்ற பணி விடை கொண்டு கையிலையங்கிரியில் நின்று
இறங்கியே விண்தெய்வ லோகத் திருகது
தண்டரளத் திருமார்பன் முத்துமாளிகையிலொரு
சரடு கொண்டினை கண்ணை லேணியில் இறங்கி
துண்று மீனக் கொடி கண்ட வழுதி நிதழு நிதழ்
சூதமாவின் கனிய தாயுதிந்தமையால்
என்றுமாய் வோமெனக் கருதியவராய
இதமான நுதலின் விழி தனைமறைந்தவளே

# வாழ்க்கை வரலாறு

பண்டைக்கால நிகழ்வுகளை இன்றுவரை சடங்காயாற்றி பேணுமபதி, தனித்துவமாய் தமிழர் பண்பாடு காக்கும் பதி, தக்கபுகழ் சான்றோர்கள் தோற்றம் பெற்ற பதி, பாவியற்றிப் பண்ணோடு பாடும் பதி, பாவலரும் பக்தர்களும் வாழும்பதி, காவியம், கும்மி, தாலாட்டு, கவிதையோடு கவினார்ந்த கூத்துக்கள் கண்ட பதி திக்கெல்லாம் ஆன்மீக அருளொலி கேட்கும்பதி, தேன் நாடாம் மட்டு நகர் தெற்கே அமைந்த பதி, வியந்து பல ஊரும் பார்க்கும் பதி, மன் முளைப்பற்றுக்கே மகிமை சேர்க்கும்பதி இத்தகைய சகல சிறப்பம்சங்களும் மிகுந்து விளங்கும் பதியான ஆரையம் பதியிலே சின்னவர் கதிரவேலு, குஞசித்தம்பி தெய்வானை தம்பதியினருக்கு, பரம்பரையாக கண்ணகை அம்பாளுக்கு பூசைசெய்யும் பொன்னாச்சி குடிமரபிலே 31.10.1931ஆம் ஆண்டு இளஞாயிராக இளையதம்பி மண்ணில் பிறந்தார். இவருக்கு சீனித்தம்பி மூத்த சகோதரனும், செல்வநாயகி சகோதரியுமாக மூன்றாம் கால் மகனாக இவர் பிறந்தார்.

ஆரம்பக் கல்வியை ஆரைப்பற்றை இராமகிருஷ்ண மிசன் பாடசாலையில் ஏழாம் வகுப்புவரை கற்றார் பின் பலதொழில்களைச் செய்து கொண்டிருக்கும் போது 17.06.1961ம் ஆண்டு முருகேசு, பொன்னம்மா தம்பதியினரின் மூத்த புதல்வியான வள்ளியம்மையை இல்லற வாழ்வின் இனிய மனைவியாக்கி நல்லற வாழ்வில் இணைந்து வாழ்ந்து, சிவானந்தராஜா, தெய்வேந்திரராஜா, கோமதி, இந்துமதி, புனிதராஜா ஆகியோர்களை மக்களாகப் பெற்று, "தந்தை மகற்கு ஆற்றும் நன்றி அவையத்து முந்தியிருப்பச் செயல்", எனும் பொய்யாமொழிப்புலவர் வள்ளுர் வாக்குக்கமைய, தந்தை மக்களுக்குச் செய்யும் உதவி அவர்களை கற்றோர் அவையில் முதன்மை பெற்றவர்களாக இருக்கச் செய்தல் என்பதற்கேற்ப

கல்வி கற்க வழிவகுத்து அவர்கள் இன்று, இறைபதமடைந்த சிவானந்தராஜா சிறைச்சாலை உத்தியோகஸ்தராகவும், வீரமா காளியம்பாள் ஆலய பிரதம பூசகராகவும் திகழ்ந்தார்.

தெய்வேந்திரராஜா கிழக்குப் பல்கலைக்கழக இலிகிதராகவும், கோமதி மட்/இ.கி. மிஷன் கொக்கட்டிச்சோலை இ.பாடசாலையில் ஆசிரியையாகவும், இந்து மதி சம்மாந்துறை நீதிவான் நீதிமன்ற சுருக்கெழுத்தாளராகவும், புனிதராஜா உரக் கூட்டுஸ்த்தாபன விற்பனை உத்தியோகஸ்தராகவும் பணிகளை ஆற்றுமளவுக்கு முன்னிலைப் படுத்தினார்.

புராண இதிகாசங்களை கற்றுத் தேர்ந்து, தந்தையின் வழிகாட்டலைப் பின்பற்றி காவிய தாலாட்டு, கும்மி பூசை செய்யும் பத்தாசி வழிமுறைகளையும் பயின்று 1976ஆம் ஆண்டிலிருந்து, கண்ணகை அம்பாள் ஆலய பிரதம பூசகராக நாற்பத்தியிரண்டு ஆண்டுகள் நற்தொண்டாற்றினார். பூசகராக பணிபுரிவதற்கு ஏற்ற பொறுமை, அடக்கம், மற்றவர்கள் மனம் புண்படாத வாறு நடத்தல், பரபக்தி மற்றவர்களை அனுசரித்து நடக்கும் மனப்பாங்கு பூசைகளை சிறந்தமுறையில் முறைப்படி நடத்தும் பக்குவம் முழுவதும் ஒருங்கே பெற்ற தலைமைப் பூசகருக்குரிய தகுதியுடன் சிறப்பான முறையில் அன்னைக்கு சேவையாற்றினார்.

ஒரு சிறந்த குடும்பத்தலைவனாக அப்பொறுப்புக்களையும், கடமை தவறாது கண்ணியமாகச் செய்து வந்தார். அதனால் மூத்தமருமகளாக சாந்தேஸ்வரி, சிவானந்தராஜா, மாலினி, தெய்வேந்திரராஜா (இலிகிதர் கிழக்கு பல்கலைக்கழகம்) இந்துமதி விஜயகுமார் (சமுத்தி உத்தியோகஸ்தர்) பிரகலாதேவி, புனிதராஜா (அபிவிருத்தி உத்தியோகஸ்தர்) ஆகிய மருமக்கள் மனம் கோணாது நடந்தார். பேரப்பிள்ளைகளாக டர்ஷிக்கா, டிலோஜிகா, விஷ்ணுக்கா, சதுர்ஷிஹரன், புவேந்திரா, ரதீஸ்வரன், சுஜீபன், வேந்தனா, தருகேஷன், மோஷிகா என பத்துப் பேரப்பிள்ளைகளுக்கும் பாட்டனானார்.

அன்னை கண்ணகையம்பாள் ஆலய பிரதம பூசகரானதும் செய்துவந்த தொழிலை விட்டு, நிரந்தர ஆலய பூசகராக தன்வாழ்வை அற்பணித்தார். பூசைகள் செய்யும் ஒழுங்கு கண்டு பக்தர்கள் பரவசமடைந்து பரபக்தியில் ஆழ்ந்திடுவார்கள் அம்பாள் பழையஏட்டில் எழுது மொருவரிடம் கொடுத்து எழுதவைத்து, குழுர்த்திப்பாடல் பாடும் நேரம் கொடுக்கப்பட்ட ஏட்டில் ஒழுங்கு முறை வரிகள் முறித்து எழுதப்பட்டிருந்தது. கண்டு பாடியவர்கள் சமாளித்து பாடி முடித்ததன்பின் அடுத்தநாள் பூசகராகிய இவரிடம் முறையிட்டு, முந்திய ஏட்டுக் கென்ன நடந்த தென்று வினாவி, வேறுவகையில

விமர்சனம் செய்ய மனம் நொந்து, அதனை ஒழுங்குமுறையில் அடுத்த வருடம் ஒருவரின் உதவி மூலம் பல இன்னல்கள், சிரமங்கள் மத்தியில் எழுதவைத்து குளுர்த்தியாடும் நேரம் பாடிய அன்பர்கள், ஆச்சரியத்துடன் மிகவும் சிறந்தமுறையில் இவ்வேடு எழுதப்பட்டுள்ளது என அவரை பாராட்டிப் பேச அதற்கு அவர் அமைதியாக புன்முறுவல் பூத்த முகத்துடன் பழைய ஏடு சிறிது பழுதடைந்தமையால் புதுஏட்டில் எழுத வைக்க அவ ஆடிய நாடகம் இது என்றும் அவவருளாலேயே இப்புது ஏடு எழுதவைக்கப்பட்டது. என்றும் கூறினார்.


வடபத்திர காளியாலயத்திற்கு மடப்பெட்டி கண்ணகை அம்பாள் ஆலயத்திலிருந்து எழுந்தருளப்படுவது வழக்கம். ஒருவருடம் அவ்வாறு எழுந்தருளப் பண்ணப்பட்டபோது அவ்வாலயத் தேவாதிகளை கட்டிவிட்டார்கள் வெட்டுவதற்கான மந்திர வித்தைகள் யாவும் தோல்வி கான அவ்வாலய பூசகர் காந்தன் குருக்கள் கோழிப்பலி கொடுப்பதற்குரிய ஏற்பாடுகளைச் செய்ய ஆலயத்தினுள்ளிருந்து வந்த பிரதம பூசகர் அவரிடம் ஆறுதலாக கண்ணகை அம்பாள் ஆலய எல்லைக்குள் எந்த விதமான நரபலியும் கொடுப்பதில்லை யென்று கூறி தீர்த்தச்சட்டியை எடுத்துவந்து, தண்ணியை ஓதித் தேவாதிகள் மீது தெளிக்க தேவாதிகள் தலைசுற்றியாட அப் பூசகர் அன்னையின் அருளையும், கண்ணகை அம்பாள் பூசாரியான இவரின் திறமையும் கண்டு அதிசயித்து நீங்கள் அன்னையருள் கைவரப்பெற்ற சக்தியுடைய பூசாரிதான் என தன்னானவும் மறைய மனதாராப் பாராட்டினார்.

இன்னு மொருவருடம் சடங்கின் போது ஆரையம்பதி முருகனாலய குருவாயிருந்த அவரிடம் கடல் நீரினால் விளக்கேற்ற முடியுமா மே, உங்களால் முடியுமா என எக்காலத்துடன் கேட்க, அதற்கும் அமைதியான புன்முறுவலுடன் இந்த அன்னை சக்தியால் அவஅதனை என்னால் செய்விப்பாவு எனக் கூறி தற்போது உதவிப் பூசகராக இருக்கும் த. தட்சனா மூர்த்தி கடல் நீர் கொண்டு வரச் செய்து விளக்கிற்கு திரியிட்டு, ஆயத்தமாக வைத்திருந்தவர், கடல் நீர் கொண்டு வந்ததும் கடல் நீரை விட்டு விளக்கேற்ற அவ்விளக்கானது ஐந்து நிமிடங்களுக்கு மேல் எரிந்தது கண்ட அக்குரு தன்னை மறந்து உங்களிடம் அம்பாளின் அபாரசக்தியுண்டு என்று ஒப்புக் கொண்டதோடு தனது தலைக்கணத்தை நொந்து, தவறுக்காக மன்னிப்பும் கேட்டார்.

இப்படியாக பல அற்புதங்களை இவர் மூலம் அம்பாள் நிகழ்த்தியுள்ளார். இவர் பலருக்கு அம்பாள நோயினால் முத்தெறியப்பட்டவர்களை அம்பாளின் மருந்தளித்து சகப்படுத்தியுள்ளார், வாயம்மாள், கூவாக்கட்டு, முள்ளுப்பொறுத்தல், திருநீறுபோடுதல், உழுக்கு சுழுக்கு பார்த்தல், நூல் கட்டுதல் தண்ணீரோதுதல். ஒருதலைக்குத்துக்கு வைத்தியம் செய்தல் போன்ற பல மந்திர, மாந்திரிக, வைத்திய முறைகளை கற்று எண்ணற்ற பேர்களுக்கு சாதி, மதி பேத மின்றிச் சேவை யாற்றிவந்தவேளை, நீங்கள் புவியில் ஆற்றியசேவைகள் போது மென்றி 06.05.2108 ஞாயிற்றுக்கிழமை ஸப்தமிதத்திதியில் மாலை ஆறுபதினைந்திற்கு அன்னை கண்ணகை இப்பூலகமவிட்டு எனது திருவடிக் கீழிருந்து முத்தியின்பம் பெறுக என பொன்னுலகிற்கு அழைத்து முப்பத்தொரு நாளான இன்றும் ஸப்தமிதிதியில் அவரது ஆத்மசாந்தி வேண்டி அன்னையைப் பிராத்திப்போம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

இவர் ஒவ்வொருநாளும், நாளாந்த கடமையோடு கூடிய வணக்க முறையாக, அதிகாலையில் எழுந்து குளித்து, முழுகி வேட்டியுடுத்து வீட்டில் இறைவழிபாடு முடித்து, தீட்சை விதிக்கமைய விபூதி தரித்து, நெற்றியில் திரிபுண்டரமாக நீறணிந்து குங்குமப் பொட்டினை புருவத்தின் மேந்நெற்றியின் முதலாவது விபூதியணிந்த கோட்டின் மத்தியில் வைத்து வரும் போது அவரின் முகப்பொலிவு அன்னை கண்ணகை அப்பாளின் அருளொளி கண்களில் பிரகாசிக்கும் முதலில் ஆரையூர் கந்தன் ஆலயத்தில் வழிபட்டுப் பின்னர் அன்னை கண்ணகை ஆலயத்திற்குச் சென்று வழிபட்டு அவவின் வேப்பிலைப் பிரசாதத்தில் ஒரு பிடியெடுத்து தமது முன் வேட்டி மடிப்பில் சொருகி தாமரைப் பொய்கை வீரமாகாளி ஆலயம் சென்று வழிபாடியற்றியபின் தாமரைக் குளத்தின் அருகே சென்று நின்று சூரிய நமஸ் காரம் செய்த பின்பு மடியில் வைத்திருக்கும் வினை தீர்க்கும் வேப்பிலைப் பிரசாதத்தை எடுத்து சாப்பிட்டு விட்டு நேரடியாகவந்து நரசிங்கர் பந்தலில் வழிபட்ட பின் தமது அருகிலுள்ள உறவினர்கள் வீட்டுக்குச் சென்று குடும்ப நலன் விசாரித்தபின்னரே தமது வீட்டுக்குச் சென்று காலையுணவு உண்ணும் வழக்கத்தை கடைப்பிடித்து நடந்து வந்தார். நோயுற்ற காலையிலிருந்தே இன்நடை முறையை நிறுத்தியிருந்தார். ஆனால் வீட்டிலிருந்து எந் நேரமும் பிரார்த்தனை செய்து பாடல்களை மெதுவாக பாடியவாறே இருப்பார்.



# அன்பு மனைவியின் பாசத்தவிப்பு

என் இனிய உயிரிலும்மேலான அன்புத் துணைவரே! நீங்கள் எனக்குத் தெய்வத்திலும் மேலான தெய்வம் எத்தனையோ ஆண்டுகளைக்கடந்தும், நீங்கள் நோயால் படுக்கையில் கிடந்த காலத்திலும் நமது களங்கமில்லாத அன்பு, பிசிறில்லாத தூய பாசம் நம்மை விட்டு எள்ளளவும் நம் உறவிலும், வாழ்விலும் ஒருபொழுதும் இல்லாமல் மறைந்து போகவில்லையே! என் உயிரே! திருமணம் முடித்தகாலத்திலிருந்து இன்றுவரை என்றும் பிரியாத "அன்றில்" பறவைகள் போல் வாழ்ந்து குடும்ப வாழ்க்கைக்கு இலக்கணமாகத்தானே வாழ்ந்தோம். சினமென்னும் பொல்லாத நெருப்பும், கோபமென்னும் கொடிய நோயும் உங்களை அண்டாமல் வாழ்ந்தவர் நீங்கள் உங்கள் வெள்ள நிறமேனிபோல உங்களது உள்ளமும் புடம் போட்ட தங்கம் போல வெள்ளையானது தூய்மையானது. இத்தனை ஆண்டுகளாக ஐந்து பிள்ளைகளின்தகப்பனாக வாழும்பொழுதும் என்னோடு கோபப்பட்டது மில்லை சினந்து ஏசுவுமில்லை. எந்த நேரமும் சிரித்த முகத்தோடு ஒரு குறையுமின்றி வாழவைத்தீர்கள்.

மூன்று ஆண் மக்களையும், இரண்டு பெண்மக்களையும் நன்றாகப்படிப்பித்து ஊர் மெச்ச வாழவைத்த தெய்வமே! கண்ணகை அம்மனுக்குத் தொண்டு செய்வதில் உங்களையே அர்ப்பணித்தவர் நீங்கள் கதவு திறந்த சடங்கு காலங்களில் "கண்ணகைத் தாயாகவே" மாறிவிடுவீர்கள் உங்களது இனியகுரலால் மந்திரம் உச்சரிக்கும் போதும், காவியம் பாடும் பொழுதும் ஊரே பக்தியால் கட்டுண்டு கிடக்குமே உங்களது பிரிவு சந்திரன் இல்லாத வானம்போல் எனக்கு ஏற்பட்டு விட்டதையா உங்களது உணர்வோடும் நினைவோடும் என்றும் வாழ்வேன் இது அழிவில்லாத சத்தியவாக்கு.

இப்படிக்கு

**உங்கள் நினைவாக வாழும் அன்புமனைவி**

# மக்களது உள்ளத்துழப்பான பாசமழை

எங்களைப்பெற்றெடுத்த தெய்வமே! நாங்கள் மூன்று ஆண்டுகளும், இரண்டு பெண்களும் உங்கள் உதிரத்தில் விளைந்த செல்வங்களல்லவா! எங்களை பாசத்தோடு, அன்போடு அணைத்து மனம் நோகாமல், கோபப்படாமல் வளர்த்து ஆளாக்கிய உத்தமத்தந்தை நீங்கள் எங்களைக்கண்ணும் கருத்துமாகக்கண்காணித்து நாங்கள் கேட்டதையெல்லாம் சிரித்த முகத்தோடு வாங்கித்தந்து எங்களது ஆசைகளையெல்லாம் கட்டுப்படுத்தாமல் தூய தகப்பனாகயிருந்து வழிகாட்டிய புனிதம் நிறைந்த அப்பா நீங்கள் எங்களை கவனமாகக்கண்காணித்த படியால்தான் நாங்கள் ஊர்போற்றும் மேன்மையான நிலைக்குவந்தோம்.

அமரத்துவமடைந்த எங்களது மூத்த அண்ணன் படிப்பிலும் உயர்ந்து அரசாங்க உத்தியோகம் பார்த்ததோடு உங்களது தெய்வத்தொண்டிலும், நீங்கள் கைக்கொண்ட சடங்கு செய்யும் பூசைத்தன்மையிலும் உங்களது வாரிசாக விளங்கினார். இறைவன் உங்களுக்கு முன் அவரை அழைத்துக்கொண்டான் மற்ற மக்களாகிய நான்குபேரும் உங்கள் புகழ்மங்காமல் படித்து முன்னேறி அரசாங்க உத்தியோகத்தில் கடமை ஆற்றி உங்களது பெருமைக்கு வித்திட்டதை நீங்கள் அறவீர்கள்தானே அப்பா! எங்களை அன்பு மழையிலே நனைய வைத்த அப்பா! கண்ணகை அம்மன் சடங்கு காலத்தில் நீங்கள் எங்களையும் அழைத்து பக்தி வெள்ளத்திலே மிதக்க விட்டதை எப்படிமறப்போம் அப்பா! உங்கள் மக்களின் வாழ்க்கையிலே முன்னேற்றம் கண்டதோடு பேரக்குழந்தைகளையும் கண்டு மகிழ்ந்தவர் நீங்கள் நாங்கள் ஐந்து மக்களும் என்றும் ஒற்றுமையாக வாழ நீங்கள்தானே எங்களுக்கு வழிகாட்டினீர்கள் எங்கள் இனிய அப்பா! உங்கள் நினைவு என்றும் எங்களை விட்டு அழியாது கல்லில் வடித்த சிற்பமாக என்றும் ஒளிரும்.

இப்படிக்கு

**உங்கள் பாசப்பிணைப்பான மக்கள்**


தனது பிள்ளைகளுடன்

# என்றும் உங்களை மறவாத மருமக்கள்



அன்பு பொங்கும் இனிய மாமாவே! நீங்கள் எங்களுக்கு வெறும் மாமாமட்டுமல்ல எங்களுக்கு என்றுமே அணையாத ஒளிவிளக்கை ஏற்றிவைத்த தந்தையும் நீங்கள் சிரித்த முகத்தோடு எங்களை அனைத்து பாசம் காட்டிய மாமா உங்களை நாங்கள் எப்படிமறப்போம். நாங்கள் திருமணமாக வந்தபுதிதில் எங்களுக்கு அன்பாக வார்த்தைகளைக்கூறி என்றும் ஒற்றுமையாக இருக்க வேண்டுமென்ற அணையாத திருவாக்கைப் புகுத்தி எங்கள் வாழ்க்கைக்கு ஒளிவிளக்காய்த்திகழ்ந்த மாமா என்றும் உங்கள் நினைவு எங்களை விட்டு அகலாது நீங்கள் கண்ணகை அம்மனின் திருத்தொண்டர் அந்தக்கற்புச்கரசித்தாய்க்கு "சடங்கு" காலத்தில் பூசை செய்வதோடு, ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் தாய்க்குச் சிறப்பான பூசை செய்து ஊர்மக்களின் துயரங்களுக்கு விடிவுதந்தவர் நீங்கள் உங்களது பேரப்பிள்ளைகள் அன்பு முத்தத்தால் நனையவைத்து இனிப்புப்பண்டங்கள் வாங்கி கொடுத்ததை நாங்கள் எப்படி மாமா மறப்போம் மருமக்களாகிய எங்கள் மீது உயிரையே வைத்திருந்தீர்கள். உங்களது தங்கம் போன்ற வெள்ளை உடம்பிலே "மல்லிகைப்பூ" நிறமான வேட்டியும், சால்வையும் அணிந்து தூய மனிதனாக விளங்கிய மாமா! உங்கள் இழப்பு எங்கள் நாலுமருமக்களையும் மிகவும் வாட்டிவதைக்கிறது மாமா மலை உச்சியிலே ஒளிகாட்டிய "பாவை விளக்கு" அணைந்து இருள் மயமானது போல் எங்களது உள்ளத்திலே துயர இருள் புகுந்து விட்டது மாமா உங்கள் நினைவு அழகிய திருமுகம் எங்களை விட்டு என்றுமே பிரியாது.

இப்படிக்கு


**மருமக்கள்**

**சாந்தேஸ்வரி, மாலினி, விஜயகுமாரன்,**

**பிரகலாதேவி**

# பேரப்பிள்ளைகளின் புலம்பல்

காலை மலராய் பூத்த நீ
கனவாய் போனது என்னப்பா!
அப்பப்பா என அழைத்தோமே
அன்பு மழையை பொழிந்தாயேயப்பா!
உள்ளங்கை தனையே நனைய
கற்கண்டை கொண்டுவந்தே
காவியனைத்துத் தரும் உன் அன்பெங்கே
ஏற்றி விட்டாய் தீபம் கோவிலிலே
ஏங்குதப்பா உள்ளம் நினைக்கையிலே...
தொட்டில் போன்ற இடுப்பினிலே
சுமந்தாய் எம்மை தாயைப் போலே
சிவந்த முகம் கண்டதில்லை பாரினிலே...
எம்மை சிவக்க வைத்தாய் தந்த அன்பினிலே....
நீர் கூட வற்றிக்கிடக்குதப்பா
உன் திருநீறு போடும் அழகைக் கண்டே...
பொல்லாண்டும் காலத்திலேயப்பா
பொல்லாங்கு பேசவில்லையே நீ
செல்லமாய் பேசினாய் செல்லப்பா என்றோமே
சிந்திய கண்ணீரோ அப்பப்பா என்கிறதே!
நீ பெற்ற பேரருளை
நீ தந்தாய் பேரருக்கே
தாவித் துடிக்குதையா! வேந்தே
உன் தங்க முகம் காணவே
பார் தந்த பரனே!
பலர் இசை கோர்த்து
பல்லாண்டும் பாடும் உன் கதையை......!



**பேரன், பேத்திமார்கள்**
**தர்ஷிக்கா, டிலோஜிக்கா,**
**விஷ்ணுக்கா, சதுர்ஷிகன் ,**
**புவேந்திரா, மோஷிகா**

# அம்மப்பா எனை விட்டு எங்கு சென்றாய் தினமும் தேடுகிறேன்.....



அம்மப்பா என்று ஆசையுடன் ஓடிவந்தால்
ஆரத்தழுவி அன்பு முத்தம் தந்துடுவாய்
கோபம் வருமாறு குழப்படிகள் செய்தாலும்
கடும் சொல்லால் என்னைக் கண்மேலும் திட்டமாட்டாய்

நெஞ்சோடு அணைத்து நீவிவிட்டுக் குதூகலிப்பாய்
பஞ்சம் பசியாவும் பறந்துடுதே என்றுரைப்பாய்
அம்மா அடிக்க வந்தால் அனைச்சிப்பிடுத்துடுவாய் - இன்று
ஆளில்லாக் கலம் போல அலைகின்றேன் அம்மப்பா

நேசரிக்குச் சென்ற போதும் நேரத்துடன் காத்திருந்து
பாசமுடன் என்னைப் பக்குவமாய் அழைத்துவந்து
அம்மா வரும் வரை ஆசைமொழிபேசி - நிதம்
பாசம் காட்டிய அம்மப்பா எங்கே காண்பேன் இனி

இன்னும் சில ஆண்டு என்னுடன் வாழ்ந்திருந்து
மின்னும் சிறப்பெல்லாம் மேன்மையுறக் கண்டுருப்பாய்
புன்னகை தவழும் உன் பூவதனம் காண்பதற்கு
விண்ணுலகம் விட்டு விரைந்து வா அம்மப்பா

பேரன்
வி. தருகேஷன்

# தவிப்பை கொட்டுகிறோம்

அப்பா அப்பய்யா அன்பு கொள் தெய்வமே
ஆசையாய் எங்களையே அள்ளி அணைத்தவரே
கண்ணிலொற்றிக் கதைகள் சொல்லித் தந்தவரே
கண்ணீரைச் சுமக்கின்றோம் கடசிவரை மறக்காமல்

நாள்தோறும் எமைக்கண்டு உங்கள் மனம் பூரிக்கும்
பேரர்கள்தான் என் செல்வம் காசுபணம் வேண்டாமென்பீர்
சொந்தபந்தம் பெரிதென்று பூரிப்பில் வாழ்ந்தவரே
எங்களையே தவிக்கவிட்டு எங்குதான் சென்றீர்கள்

தினம் தினம் காலையிலேயே எம்வாசல் ஏகிடுவீர்
நெற்றியுடன் நெற்றியோ அன்பினைச் சொரிந்தவரே
அம்பிகையின் திலகமதை எங்களுக்குச் சூட்டிடுவீர்
எங்களையே ஏங்கவிட்டு எங்குதான் சென்றீர்கள்

நேசமும் பாசமும் உங்களிடம் கண்டோமே
நீதியும் நேர்மையும் உங்களிடம் கற்றோமே
ஆரையூர் அமுதகண்ணீர் அன்றுதான் யாம்கண்டோம்
பாசத்தில் தவிக்க விட்டு எமைப் பிரிந்து சென்றதெனோ

உன்பக்தி வேண்டுதலில் யாமிங்கு உயர்கின்றோம்
நோய்நொடிகள் நெருங்காது உன் பிரார்தனையை யாமிறிவோம்
ஆசையையும் அன்பினையும் இழந்திங்குநிற்கின்றோம்
இனி என்றுதான் காண்போம் உங்கள் புனித முகத்தினையே

நம்பியே அலைகின்றோம் அடுத்தஜென்மம் உண்மையென்று
மீண்டுமிங்கு பிறக்கவேண்டும் எங்கள் பிணைப்புடனே
உங்கள் பேரர்களாய் வாழ்ந்திடவே எமக்காக என்றென்றும்
என்றுதான் வருவீரோ எங்குதான் காண்போமோ.....

என்றும் உங்கள் இழப்பால் தவிக்கும் அன்புப்
பேரச் செல்வங்கள்
**தெ. ரதீஸ்வன், தெ. சஜீவன், தெ. வேந்தா**



தனது மருமக்களுடன்



தனது பேரப்பிள்ளைகளுடன்

# பாசமிகு பெரியமாமாவுக்கு

நெற்றிமீது நீறுபூசி உங்களை பார்க்க
மீண்டும் எப்போது இயலும் அன்புத பெரியமாமாவே

உங்களை மிஞ்சிய வைத்தியர் இல்லை
கொடிய அம்மை நோய்க்கு பெரியமாமவே

வெளிநாட்டு இனிப்பென்று கூறி கசப்பான
வேப்பிலை துளிரையும் பெரிய மாமாவே

அருமருந்தென்று உண்ணத்தரும்
அற்புத உத்தமரான பெரியமாமாவே

அறவழி நின்று பக்தி நெறியை எங்களுக்கு
கனிவாக ஊட்டிய அன்பு பெரியமாமாவே

உங்களுக்கு இதயம் நொந்து எங்கள் கண்ணீர்
பாமாலையை சமர்ப்பிக்கின்றோம் அத்துடன் தூய
ஆத்மா கண்ணகி பாதம்
சேர பிராத்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும் மருமக்கள்
(தனோத், வினு, காரணி, வர்ஷினி

# மைத்துனர்மாரும் மச்சான்மாரும் தருகின்ற கண்ணீர் அஞ்சலி

எங்கள் இனிய மச்சானே! நீங்கள் எங்களுக்கு மச்சான் மட்டுமல்ல பெற்ற தகப்பன் போல் எங்களோடு பாசமாகவும் அன்பாகவும் இருந்தவர் நீங்கள் உங்களது பிரிவு எங்களது நெஞ்சிலே பாறாங்கல்லை ஏற்றிவிட்டது போல் பெரும் சோகத்தை ஏற்படுத்துகிறது மச்சான், எங்களை அன்பால் அணைத்து பாசத்தோடு அரவனைத்து உங்களது பெற்ற பிள்ளைகளைப்போல் எங்களுக்கு வழிகாட்டிய உத்தம மனிதர் நீங்கள் உங்களது மறைவு என்றும் எங்களை விட்டு அகலாது. எங்கள் இனியமச்சானே! உங்கள் ஆன்மா முத்திபெற்று மோட்ச வீடு காண முருகக்கடவுள், காளித்தாய், கண்ணகை அம்மன் நாங்கள் மச்சான்மாரும், மச்சாள்மாரும் தூய மனத்தோடு வேண்டுதல் செய்வோம்.

**மைத்துனன்மாரும், மச்சான்மாரும்**

## செல்வநாயகியின் செல்வங்களின் ஆதங்கம்


கதிரவேலு தம்பதியினரின்
கடைசி புத்திரனாய்
கண்ணகைக்குத் தொண்டு செய்யக்
காசினியில் கால் பதித்த ‒ எங்கள் மாமா

செல்வநாயகியாம் உங்கள் சோதரியின்
செல்வங்கள் எம்மைச்
சிறுவயது முதல் சோறூட்டிச்
சீராட்டி வளர்த்தீர் ‒ எங்கள் மாமா

கடுகளவேனும் கள்ளமில்லா நெஞ்சுடனே
கண் விழிக்கும் நேரத்திலே
கடப்படியில் இனிப்புடனே
கண் முன் னேதோன்றுடுவீர் ‒ எங்கள் மாமா

சீற்றமுடன் யாரேனும் சினந்தெழுந்தாலும்
சிரிப்பால் சினமடக்கும்
சிந்தனைச் சிற்பியான நீங்கள்
சிறப்பாய் பார் போற்ற வாழ்ந்தீர் ‒ எங்கள் மாமா

காலத்தின் கோலத்தால் படுக்கையில் இருந்தாலும்
வெள்ளாமா என எங்கள் பேரன் அழைத்தாலும்
ஓய் எனக் குரல் கொடுப்பீர்
கண் விழித்துப் பார்த்திடுவீர் ‒ எங்கள் மாமா



வாழ் நாள் முடிந்ததென்று ‒ விரைவாய்
வானுலகம் செல்வீரென நாங்கள்
எதிர் பாரா வேளையிலே வந்தது உங்கள்
இறப்பு எனும் இடியோசை

அழுது புரண்டாலும் மாண்டவர் வரார்
என்பது போல் மனதால் எண்ணுகின்றோம் – ஆனாலும்
உள்ளம் தான் மறுக்கின்றது
உங்கள் மரணத்தை

கண்ணகிக்குத் தொண்டு செய்து
கண்ணியமாய் வாழ்ந்தவரே
கண்ணகியின் பாதமதில்
கைகூப்பி நிற்கின்றோம் உங்கள் ஆத்மா
சாந்தியடையுமென்ற நம்பிக்கையில்
செல்வநாயகியின் செல்வங்கள் நாம்

**இவ்வண்ணம்**

**நவலோஜினி, தவலோஜினி, தயலோஜினி,**
**ரூபலோஜினி, கமலச்சந்திரன்,** யோகச்சந்திரன்



# மருமக்கள் இயம்பல்

அம்மாவின் இளைய சகோதரனாய்
ஆரையம்பதிக்கு செல்லப்பராய்
இருவருக்கும் தாய் மாமாவாய்
ஈன் றெடுத்தாள் ஆரையூர் அன்னையவள்

உவகையுறும் உன்பேச்சும்
ஊட்டி வளர்க்கும் தாய்பாசமும்
எட்டி நடக்கும் வீராப்பும்
ஏங்கவைக்கிறது எம்மை உம்பிரிவு

ஐந்தும் படித்ததில்லை என்பாய்
ஒட்டுமொத்த மந்திரமும் காவியமும்
ஓதுவதைப்பார்த்து அஃசந்திடுவோம் அனைவருமே

ஔடதங்கள் பயனற்றுப்போக
ஃதினுகக சென்றவிட்டாய்
அகிலத்தில் நாமிருந்து
ஆத்மா சாந்தியடைய
இறைவனை இறஞ்சும்
ஈருயிராம் நாமிருவர்

மருமக்கள்
சிவயோகம் மாங்கயற்கரசி
கண்ணகிம்மன் கோவில் வீதி,

# வெள்ளப்பா என்றழைக்கும் சித்தப்பாபற்றிச் சிலவரிகள்

சீனித்தம்பியின்
செல்லமான தம்பி
செல்லப்பா எனும்
இளையதம்பி இவர்
கண்ணகி அம்மனின்
காவியமும் மந்திரமும்
காதினிலே இனிமையாய்
காலமெலாம் இனித்திருக்கும்

வெள்ளை மேனியழகு
அதில் மூன்று குறி
வெண்பூச்சு அழகு
உள்ளம் அழகு
உதடு சொல்லும்
ஒரு வார்த்தை அழகு
வெள்ளை வேட்டி அழகு
வெள்ளை நெற்றியில்
குங்கும பொட்டழகு
இத்தனை அழகினாலும்
எனது வெள்ளப்பாவே அழகு

குஞ்சுமனா என்று
கொஞ்சிக்குலாவி அழைத்து
ஐந்து திரியிட்டு
அத்தனை விளக்கும் ஏற்று
பொங்கல் பானை திறந்து
ஐந்து அகப்பை வீதம்
அத்தனை வாழைஇலையிலும் மிடு
மடைகளைப் பார்த்து
தாமரைப்பூ. கமுகம்பூ
கத்தி வா எனும்
அன்பு கட்டளை
அடி மனதில் இன்னும்

அன்பாய் இனிக்குதப்பா
வெள்ளப்பா அன்பாய் இனிக்குதப்பா

குயில்லோசை கூவிநிற்க
வம்மிப்பூ வாசம் வீச
கொன்றைப்பூ ஜோலித்து நிற்க
அரச இலை சலசலக்க
அம்மன் சடங்கின் ஞாபகம்
குதுகலமாய் மனதில் வர
உங்கள் ஞாபகம் தான் ஓடி வரும்

வயதின் முப்பினால்
அசைவிழந்து போனாலும்
என்று என் மனதில்
இருக்கும் உந்தன் அன்புகுரல்

பெறாமகன்
**சீ. புஸ்பராசா** (ஆசிரியர்)
யா/ஹட்லிக்கல்லூரி



# மக்களோடு வாழ்ந்து மறைந்தும்

# மறையாத உள்ளம்!

தெளிந்த முகமும் தெய்வீகக் களையும்
தெள்ளமுதாம் தாயாரின் காவியமும் கலைநயமும்
தன்னகத்தே கொண்டு தனயனாய் காத்த
தந்தையாய் வாழ்ந்த தாயார் மைந்தன்

மீன்பாடும் தேன்நாட்டின் ஆரையூர் கண்ணகியின்
மேன்மை கொண்ட பூசகராய் நாற்பத்திரண்டு வருடங்களாய்
எவ்வித குறையுமின்றி போற்றி வந்த தந்தை நீர்
எம்மிடமிருந்து பிரிந்தபோது பதறி நின்றோம்

கனிவு நிறை பார்வை கண்களிலே மின்னும் ஒளி
கண்ணகி அம்மனை நீர் சுமந்து வரும் வேளையிலே
ஆரையூர் மக்களெல்லாம் அம்மனாய் உமைஎண்ணி
அனுபவித்த காலங்கள் தான் மறக்கலாமோ

அன்பின் பார்வைகொண்டு அணைத்தெடுத்த மக்கலெல்லாம்
அலறித் துடிக்கும் உன் அருமைகளை எண்ணி
கண்ணகித் தாயாரின் கண்ணான மைந்தன் நீர்
கனிப்புடனே அவள் பாதமதில் சரண்புகுந்திடசென்றீரோ

மறக்கவில்லை நாம் மக்கள் உன் பெருமைதனை
மனதார துதிக்கின்றோம் உன் ஆன்மஈடேற்றத்திற்கு
புகழுடன் வாழ்ந்த உம் ஆன்மா என்றும்
தாயார் காலடியில் தவிழ்ந்திட அன்னாரை

நினைந்து பிரார்த்திக்கும் அன்புள்ளங்கள்
மண்ணில் மறைந்ததும் மறையாத அன்பரின்
ஆத்மா சாந்தி யடைவதாக

ஆரயம்பதி

**ஆற்றல் பேரவை**

ஆரையம்பதி ஸ்ரீ கண்ணகை அம்மனாலய பிரதம பூசகர் அமரர் இளையதம்பி அவர்களின் மறைவையொட்டி ஆரையம்பதி ஸ்ரீ கந்த சுவாமி ஆலய பிரதம பூசகர் சிவஸ்ரீ தற்புருஷ சிவாச்சாரியார் கனேச சோதிநாதக் குருக்கள் ஐயா அவர்களின்

# ஆசிச்செய்தி

ஈழமணித் திருநாட்டின் கீழ் திசையில் மையமாக விளங்கும் மட்டக்களப்பின் முத்தென திகழும் நீர்வளம் நிலவளம் கல்விவளம் மற்றும் சகல வளங்களும் ஒருங்கே அமையப்பெற்ற ஆரையம்பதி எனும் புனித பதியில் முத்தெனதிகழும் ஸ்ரீ கண்ணகி தேவியின் திருவருள் மகிமையை பார்பரப்பும் பத்திமிகு பூஜிதனாய் பொன்னாச்சி குலம் வந்து கதிர்வேலு தெய்வானை ஆகியோருக்கு புத்திரராய் அவதரித்து பக்திமிகு மண்டாட்ட பூஜையினை அன்னைக்கு சேர்வித்து ஆரையம்பதி மக்கள் மட்டுமன்றி அனைத்து மக்களின் மனங்களையும் கொள்ளை கொண்டு. வேண்டி வரும் மக்களின் நோயகற்றும் மருந்தாக புன்முறுவல் பூத்த முகத்துடன் பணிகள் செய்து ஆரையூர் மக்களின் ஆத்மாத்த குருவாக இருந்து சேவைகள் பல புரிந்த எங்கள் பக்திமிகு பாசமிகு இளையதம்பி ஐயாவின் மறைவானது எனது மனதிலும் நமது ஊர்மக்கள் மனதிலும் தாக்கத்தினை ஏற்படுத்திருக்கிறது என்றால் அது உண்மையே

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான் உறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

குறள் பாவுக்கு ஏற்ப எடுத்து காட்டாக என்னும் வாழ்ந்து வானுலகத்துள் ஒரு வராக வாழ்ந்து கொண்டிருக்கும் அமரர் இளையதம்பி ஐயாவின் ஆத்மா சாந்தி அடைய கந்தனின் கருணையும் கண்ணகியின் பேரருளும் கிடைக்கப் பிரார்த்திப்பதோடு அன்னாரின் குடும்பத்திற்கு நல்லாகி வேண்டி ஆசி கூறி இறைவனை பிரார்த்திக்கிறேன்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!!!

சுபம்

இவ்வண்ணம்
**கணேச சோதிநாதக்குருக்கள்**
ஸ்ரீ கந்த சுவாமி பேராலயம் ஆரையம்பதி

# நீத்தார் நினைவு

வையத்து வாழ்வாங்கு வாழ்வான்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும் – என்ற
வள்ளுவர் பெருந்தகையின் வாக்கிற்கு இணங்க
கதிரவேலு இளையதம்பி என்பான்
கருத்துடனே மண்உலகில் அவதரித்து
எண்பத்தி ஏழுஆண்டு வாழ்ந்து
நாற்பது ஆண்டுக்கு மேல் ஆரைநகர்– கண்ணகிக்கு
அரும்பணி செய்தார் பூசாரி செல்லப்பா என்றால்
அறியாதோர் யாரும் இல்லை ஆரையூரில்
திருக்கதவு திறக்கும் போது கால் கழுவி
கற்பூரச்சட்டி, ஏந்திவரும் பக்தர்களுக்கு
கண்ணகியாகி நீ வந்தாய்
ஆலயம் வரும் அடியார் களுக்கு
நீவைத்த திருநீறு, மஞ்சல், குங்குமப்பொட்டும்
அருள் கடாச்சமாய் அருள் கொடுத்தது
கல் வீட்டு திண்ணையடி சின்னப்பருயினார்
ஆலயத்தினர் உன்னை நாடி
அழைக்கும் போது வருகிறேன் – என்று
கூறி நேர்ப்புகட்டி – சபங்கினை
நடத்தி வருவாய் உன், அருட்கடாச்சித்தால்
சிறிதாய் இருந்த ஆலயம் – பெரிதாகி
வளர்ச்சி கண்டு மேலாங்கி நிற்கிறது
வையத்துள் நீ செய்த சேவை போதும் என்று
எண்ணியோ என்னவோ வானுலகம் வா என்று
கண்ணகியும், பரமநயினாரும் அழைத்து சென்று விட்டனர்
மண்ணுலக வாழ்வை விட்டு சிவபதம் அடைந்த நீர் சிவலோகம்
தன்னில் சிறப்புற இறைவனை வேண்டி பிராத்திக்கிறோம்

**கல்வீட்டு திண்ணையடி சின்னப்பரமநயினார்**
**ஆலய பரிபாலன சபை**

24.05.2018 ஆரையம்பதி.

# மறைந்தும் மறையாது மனதை நிறைந்த மாண்பு

# டையோன்

பிறப்பதும் இறப்பதும் இறைவன் கையில் இடையில் நாம் வாழ்கின்ற வாழ்க்கைதான் நம்கையில் இந்த வாழ்க்கையில் நாம் எப்படிவாழ்ந்தோம் என்பதை சீர்தூக்கி பார்க்க வேண்டும் மறை நூல்களும், அறநூல்களும் நாம் இப்படித்தான் வாழவேண்டுமென் கூறியிருந்தும் நாமெல்லாம் அப்படி வாழ்கின்றோமா என்பதை நினைத்துப்பார்க்கவேண்டும்.

இந்த வாழ்க்கைதான் ஒருவனின் மாண்பினை உயர்த்துவதும் தாழ்த்துவதும் மனிதர்களில் சிலர் தான், தன்மனைவி, தம்மக்கள், தமது உறவினர் என சுயநலவாழ்வினை வாழ்ந்து மறைந்து மற்றோரால் மறக்கப்பட்டும் விடுகிறார்கள்.

இன்றும் சிலரோ இல்வாழ்வோடு பிறருக்காகவும், சமய, சமூக சேவையிலும் ஈடுபட்டு மக்கள் மனதில் என்றென்றும் நிலையாக நிற்பார்கள் இந்த வகையில் கதிரவேற்று இளையதம்பி அவர்கள் இல்லறு ஒரு சிறப்பான வாழ்க்கை வாழ்ந்து தனது இக உலக வாழ்வை முடித்தார்.

இவரது பெயர் இளையதம்பி என்றிருந்தாலும் இவரைச் “செல்லப்பா” என்றே செல்லமாக அழைப்பார்கள். இதற்கு சிலர் புற வாழ்வில் செய்த திருப்பணிகளே காரணமாகும்.

ஆலயம் பல நிறை பழம்பெரும் பதியாம் ஆரையம்பதியில் கோயில் கொண்டு குருகுலத்தோரின் குலதெய்வமாய் அருளாட்சி புரியும் அன்னை கண்ணகிக்கு பத்ததிமுறை தவறாதுசெய்தவர் பூசை

பொன்னாச்சி குடிவழியில் பத்தக்கட்டாடியாரின் பரம்பரையில் வந்த இவர் ஸ்ரீ கண்ணகி அம்மன் கோயில் பூசகராக (கட்டாடியார்) பனியாற்றியவேளை அடியார்கள் எல்லாம் இவரை அம்மனின் பிம்பமாகவே நினைத்து வந்தார்கள் வருடந்தோறும் இடம் பெறும் சடங்கு உற்சவத்தோடு பிரதி வெள்ளிக்கிழமை தோறும் இடம் பெறும் பூயையும் விசேட பூசைகளையும் செவ்வனே செய்தவர்.

ஆரையம்பதி மக்கள் மட்டுமல்ல அயலூர் மக்களும் வேறுமத்தவர்களும் தமது துன்ப துயரங்கள், நோய்கள் மற்றும் வேறு தேவைகளுக்காகவும் பரிகாரம் தேடி இவரிடம் வரும்போதும் இவர்களுக்கு திருநீறுபோடுதல், நூல் கட்டுதல் தண்ணீர் மந்திரித்துக் கொடுத்தல் என்பவற்றை செய்து அவர்தம் துயர் நீக்கியவர். இது மட்டு மன்றி அம்மன் நோய் போன்றவை ஏற்படுமிடத்து அவர்கள் வீடு சென்று பரிகாரம் செய்தவர் இவர்தம் பணியாய், பண்பால், அன்பால் இவர் மக்கள் மனங்கலிலே என்றும் நிலையாக நிற்பார்.

“வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்” என்ற வள்ளுவர் பெருந்தகையின் வாக்குக்கமைய வாழ்த்து தெய்வத்துள் சேர்ந்து விட்ட இவர் ஆன்மா என்றும் இறைவன் திருவடி நீழலில் வாழட்டும்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**சம்மானோட்டி பாகைமக்கள்**

ஆரையம்பதி.

# என்றும் ஊர்மக்கள் நெஞ்சில் வாழ்வீர்.

1. வாழ்வாங்கு வாழ்ந்து வாழ்க்கைக்கு இலக்கணமாகி வண்ணத்தமிழ் போல் விளங்குபுகழாய் உயர்வு பெற்று வாழையடி வாழையாகக் கண்ணகை அம்மனுக்குப் பூசை செய்யும் விளங்குபுகழ் பொன்னாச்சி குடியாரின் தலைமகனே! பழிபாவம் செய்யாது பண்பாட்டைக் கைக்கொண்டு பொல்லாப்புச் செய்யாமல் பொய் அழுக்கை ஏற்காமல் சூழும் வினைக்கு இறையருளால் நிரந்தர விலக்களித்து சிரித்த முகத்தோடு வலம் வந்த இளையதம்பி ஐயா உமை மறவோம்.

2. நல்ல குடும்பம் பல்கலைக்கழகம் என்றார் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் நன்மை அவ்வார்த்தை போல் குடும்பத்தில் வாழ்ந்தவரே! வெல்ல முடியாத இடர்தனை கண்ணகை அம்மனால் வென்றீர்! வாதை செய்யாமல் எல்லோரையும் நட்போடு அணைத்தீர்! தொல்லுலகில் தூய்மையாய் வாழ்வதே பெருங்கொடையாம் தந்தையாய் அன்புக் கணவனாய் வாழ்ந்திருந்து பெருமைபெற்றீர் நல்லவர் வல்லவர் என்று ஆரையம்பதி ஊரே மெச்ச வாழ்ந்து நலுங்காமல் சிதையாமல் கண்ணகை தாயோடு கலந்துகொண்டீர்.

3. ஊருக்கு நிழல் தந்த அரசமரம் விழுந்தது போல் எங்கும் ஒளிதர அமுதநிலா மறைந்தது போல பாரெல்லாம் இசைதந்த இனிய வீணை உடைந்தது போல் பண்பான ஐயா எமைவிட்டு மோட்ச வீடு புகுந்தீரோ! தேரின் சிறப்பாக என்றுமே இனிப்புத்தரும் முத்தமிழ்ச்சுவையாக தேவிக்குப் பூசைசெய்தாய்! பொல்லாத விதிப்பயனால் ஊரே அழுதுமாய, மந்திரத்தை காவியத்தை அழகாகப்பாடும் ஐயா உங்கள் மரணம் முடிவல்ல! மீண்டும் துளிர்க்கும் புதுவரிவாம்!

ஆ. தங்கராசா

ஆரையம்பதி.


# மக்கள் மனங்கவர்ந்த மாமனிதன்

ஆரையம்பதி மக்கள் எல்லோரும் செல்லமாக செல்லப்பர் என்று அழைத்த இளையதம்பி பூசகர் அவர் எப்போதும் சிரித்த முகத்துடன் இன்சொல் பேசுவார் நான் அறிந்தவரை ஒருபோதும் அவர் மற்றவர்களுடைய மனதை நோகடித்தது கிடையாது கண்ணகி அம்மனுக்கு நீண்ட காலமாகப் பூசகராகப் பூசை செய்து பயபக்தியோடு அம்மனை அரவணைப்பார் இவர் ஆரையம்பதி பேச்சியம்மன் ஆலய உற்சவகாலங்களில் வருடம் தோறும் வருவார் எதையும் எதிபார்க்கமாட்டார்.

ஒரு சிறு குழந்தை உடுக்கையைத் தூக்கிக் கொடுத்தால் கூட அதை பயபக்தியோடு வணங்கி வாங்கிக்கொள்வார். பேச்சியம்மன் ஆலய பிரதமபூசகர் மகேந்திரராஜா வைத்தியர் அவர்களுடன் மிகவும் நட்பாகப் பழகிவந்தார் பேச்சியம்மன் ஆலய அகவலில் கூட புஸ்பவாகனத்தில் புகுந்திருப்பவளே கோவலர்க்காக கண்ணகியாகி மாதவியாகி கவனபாரியாய் உலகில் சிவனை எதிர்த்து திருவாசியாய் நின்றுதித்த சிவானந்த வல்லியே திருவுரு பேச்சியானவள் நீயே என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இதை நான் ஏன் இவ்விடத்தில் குறிப்பிடுகின்றேன் என்றால் நான் இளைஞனாக இருந்த காலத்தில் ஆரையம்பதி வடபத்திர காளி அம்மன் வீரகம்பம் வெட்டும் வைபம் கண்ணகி அம்மன் ஆலயத்தில் நிகழ்ந்த காலமதில் தேவாதி ஒருவர் படுகளம் விழுந்து கட்டுண்ட வேளையில் பல மந்திர உச்சாடனத்தின் பின்னர் துணைப் பூசகர் ஒருவர் கோழிச்சேவலை எடுத்து மந்திர உச்சாடனம் செய்ய முற்பட்ட வேளையில் அதைத்தடுத்து நிறுத்தி ஆக்கிரோஷமான மந்திரத்திற்கு வரவழைக்கின்ற அந்த காளி

அம்மனை தாயே நீ இவ்விடத்தில் கண்ணகியாக வா எனக்கூறி இவரது மனவலிமைக்கும் மந்திர உச்சாடனத்திற்கு அந்த மாசக்தி கண்திறந்து கண்ணகியாக உருவெடுத்து அந்த தேவாதி ஆடியதை எண்ணிப்பார்க்கும் போது மெய்சிலிர்க்கின்றது இன்றைய சமுதாயத்தில் ஒவ்வொரு மனிதனும் சூது, வாது, இறுமாப்பு, அதிகாரவெறி என்று வாழ்கின்ற காலமதில் தனது அன்பினாலும் மனிதநேயத்தாலும் மக்கள் மனங்களைக் கவர்ந்து மாமனிதனாக வாழ்ந்த இளையதம்பி பூசகராகிய இவர் தன்னுடைய தன்னலமற்ற இறைசேவையினால் தன்பிறவிப்பேறினை அடைந்திருக்கின்றார். ஆகவே இவருடைய ஆத்மாசாந்தி அடைய இறைவனை வேண்டிக்கொள்வதோடு இவருடைய தொண்டும் சேவையும் நிச்சயமாக இவருடைய குடும்பத்தார வாழவைக்கும் என்ற நம்பிக்கையோடு விடைபெறுகின்றேன்.

இவ்வண்ணம்
**பூ. புஸ்பாராஜா**
தலைவர்
ஸ்ரீ சித்தி விநாயகர், ஸ்ரீ பேச்சியம்மன்
ஆலய பரிபாலன சபை
ஆரையம்பதி.



## 06.05.2018 அன்று இறை பதமெய்திய எமதன்பிற்கும் மதிப்பிற்குமுரிய கண்ணகியம்மன் ஆலய பிரதம பூசகர் திரு.க.இளையதம்பி அவர்களின் 31ம் நாள் நினைவையொட்டி

கதிரவேலு தெய்வானை செய்தவத்தால் காசினியில்
கண்மணியாய் வந்துதித்து கண்ணகிக்குப் பூசை செய்தீர்
உதிராத மலராக மணம் வீசி மகிழ்ந்திருந்தீர்
உம்பர்பதி சேர்ந்தீரோ? ஊரையே அழவைத்து

முப்பத்து ஒன்று பத்து முப்பத்து ஒன்றினிலே
மூதூரம் ஆரைநகர் அவதரித்த ஐயா நீர்
எப்போதும் மங்காத கீர்த்தியுடன் வாழ்ந்திருந்தீர்
இறையடி சேர்ந்து விட்டீர் எமையெல்லாம் தவிக்க விட்டு

ஒரு போதும் தற்பெருமை பேசாத பூசகர் நீர்
உள்ளதெல்லாம் என்னிடத்தில் அம்மனருள் மட்டும் என்பீர்
திருவகை எம்மோடு சேர்ந்திருந்தீர் நாம் மகிழ
தேவுலகு சென்றீரோ? தேவி பாதம் அருகிருக்க

கனிவான பார்வையினால் கண்டவரைக் கவர்ந்திழுத்து
இனிதான மொழிபேசி எப்போதும் முறுவல் செய்பது
புனிதனாய் எம்மூரில் புகழ் பெருக வலம் வந்த
மனிதம் நிறைந்தவரே மறப்போமா? நாமும்மை

நாற்பத்திரெண்டாண்டு நல்லதொரு பூசகராய்
நற்பணிகள் செய்து வந்தீர் நலமோடு தாயார்க்கு
ஏற்புடைய பணிகண்டு இதயம் குளிர்ந்து அம்மன்
இந்திரப்பதிதனிலே இடம் தர அழைத்தாளோ?

மண்ணுலக வாழ்வு இது போதுமென்று தான் நினைந்து
மனைவி, மக்கள், சொந்தங்கள், உறவுகளைத் தான் மறந்து
விண்ணுலகு விரைந்த உங்கள் ஆன்மா சாந்தி பெற
வேளார் பாகை மக்கள் வேண்டுகிறோம் அன்னைதனை

**இவ்வண்ணம்**
**வேலாளர் பாகை மக்கள்**






**கண்ணகைதாசன் கட்டாடியார் கதிரவேலு இளைதம்பி**

ஒருவர் வாழ்ந்த வாழ்க்கையின் வருடங்களின் எண்ணிக்கையைக் கொண்டு அவரை மதிப்பீடு செய்யமுடியாது. அவர் எப்படி வாழ்ந்தார் என்பதே கணிக்கப்பட்டவேண்டும். அந்த வகையில் எம் மத்தியில் வாழ்ந்து அமரத்துவம் அடைந்த எல்லோரும் " செல்லப்பா", " வெள்ளப்பா" என்ற செல்லப் பெயர்களால் அழைக்கப்படும் கதிரவேலு இளையதம்பி அவர்கள் சமூகத்திற்கும் ஆத்மீகத் துறைக்கும் தன்னலம் கருதாது கருதாதாற்றிய அர்ப்பணிப்பான பணிகளை அளவிட்டுக் கூற முடியாது.

" உலகம் ஒரு நாடகமேடை - அதில் உதித்தவர்கள் நாமெல்லோரும் நடிகர்கள்தான் உத்தம பாத்திரம் ஏற்று நடித்தவர்க்ள உயர்ந்தவராகி மற்றவர் உள்ளங்களில் மறவாதென்றும் நிலைத்திருப்பர்"

என்பதற்கமைவாக தளராத மனமும், உறுதியான உடலும், பாரம்பரியங்களில் பற்றும் மிக்க சிறந்த ஒழுக்க சீலராகவும் விளங்கி, கண்ணகை அம்பாளுக்கு நாற்பத்தியிரண்டு வருடங்கள் ஆலய பூசகராகவும் சேளைவயாற்றிய செம்மல் அம்மன் நோய் தீர்க்கும் அருள் மருந்து அருள் மருந்து, தேவாதிகள் திருப்பதிப்படும் வகையில் ஆட்டுவித்து, உடுகு தெறித்து, உள்ள முருக கும்மி, காவியம், தாலாட்டியிசைத்தும், மடப்பலி முறைப்படி அளித்தும் மனமகிழ்வோடு மழையேறவைக்கும் அற்புதமும் பயபக்தியோடு அன்னைக்குப் பூசை செய்யும் பக்குவமும், சாந்தமான அன்னை சொரூபமும் கைவரப் பெற்ற பூசகர் கட்டாடியார் என்றால் மிகையாகாது

“தோன்றில் புகழுடன் தோன்றுக அஃதிலர்
தோன்றுதல் தோன்றாமை நன்று”

என்று கூறிய வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கு ஒப்ப வாழ்ந்து

அன்பான மனைவி, அருந்தவப் புத்திரர்கள், புத்திரிகளையும் வையத்துள் வாழ்வாங்கு வாழவைத்து, தந்தை மக்களுக்காற்றும் கடமைகளைக் கச்சிதமாய் செய்து முடித்த மனத்திருப்பதியுன் பொன்னுலகம் வீற்றிருக்கும் கண்ணகை அம்பாளுக்குப் பூசகராய்ப் போனீரோ? ஆண்டு தோறும் வைகாசித் திங்கள் அன்னையோடாரை நகர் ஆலயம் வருவீரோ? என்று எண்ணும் வண்ணம் எங்கள் இதயங்களில் என்றும் திண்ணமாய்ச் சடங்கு தோறும் மண்ணும் விண்ணும் உள்ளவரை எண்ணமதில் நிலைத்திருப்பீர்.

அன்னாரின் மறைவினால் துக்கசாகரத்தில் ஆழ்ந்துள்ள அவரது குடும்பத்தினருக்கு மனசாந்தி வேண்டியும், அமரத்துவமடைந்த இப்பெருதகையின் ஆத்மா அன்னை கண்ணகையின் திருவடியில் நித்திய சாந்தி பெறவும் வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**என்றும் இறைபணியில்**

ஸ்ரீ பரமநயினார் பரிபாலன சபையினர்

ஆரையம்பதி.

## ஆரையம்பதியில் பக்தியிமிகு குருவாய் நாற்பத்திரெண்டு ஆண்டுகளாய் கண்ணகித் தாயாரின் பணிசெய்து இறைபதம் அடைந்த கதிரவேலு – இளையதம்பி அவர்கட்கான இரங்கல்கள்

### வெண்பா

பூர்வீக நாயகியாய் பார்போற்றும் தெய்வமென ஆரையூர் அரசாளும் நாயகியே உன் பதியில் நாற்பத்தி ரெண்டு ஆண்டுகளாய் பெரும் பூசை செய்து அருள் சேரச் செய்த ஐயாவை திருவடியில் சேர்த்தருள்

அன்றும் இன்றும் அளவு தனை பேணி சிறப்பாக கண்ணகியின் பூசையினை பக்தியுடன் செய்து பூர்வீகம் பேணி பூஜா கருமமெல்லாம் சிறப்பாக பூஜித்த ஐயாவை வைகுந்தம் சேர்த்தருள் அமைதியின் இருப்பிடமாய் கருமமேகண்ணாய் அன்னையின் பூசையினை சிறப்பாக எப்போதும் அன்போடு அருள் சேர நாற்பத்திரெண்டாண்டு பணி செய்த ஐயாவின் ஆன்மாவை அன்னையே கைலாய மூத்தி சேரவை.

குலதெய்வமான அன்னையை விட்டு என்றும் வேறு இடம் செல்லாத அடியவனே விருப்பமொடு மானசார நீ செய்த பணியால் திண்ணம் அன்னையவள் திருப்பாதம் உமக்காம் அறி.

பேராசை இல்லாமல் ஊர்மக்கள் மனம்குளிர அன்னையின் பணியெல்லாம் சிறப்பாக நிறைவாக ஆலயத்தின் பெருவளர்ச்சி கண்டு நாற்பத்திரெண்டாண்டு நிறைவோடு இறையடி சேர்ந்த மாமணியே உன் முத்தி திண்ணம் அறி அம்மனின் அருளோடு சிறப்பு மிக்க மனையாளும் சிறப்புமிக்க புத்திரர்கள் அரவணைப்பும் நிறைவாக புத்திரிகள் பாச மழைபொழிய பேர மக்கள் மழலை மொழி சுவர்க்கம் அருளும் அறி.

ஊர்மக்கள் போற்ற உறவினர்கள் மதிப்பளிக்க அடியவர்கள் மனம் குளிர பணிவோடு அன்னையவள் மனம் குளிர பூசித்த பூசகரே திண்ணம் தப்பாமல் வைகுந்தம் வழி திறக்கும் அறி

சுபமஸ்து

**இவ்வண்ணம்**
**கிரியா கலாநிதி. கணேசலோக நாதக்குருக்கள்**
ஸ்ரீ சிவனேஸ்வரர் ஆலய பிரதம குரு
ஆரையம்பதி.

## அமரர். க இளையதம்பி அவர்களின் மறவையொட்டி
## ஆரையம்பதி ஆலயடி ஆதிவைரவர் ஆலய
## அறங்காவல்சபையினர் விடுக்கும் சிறு கண்ணீர்

நீள நினைக்கின்றோம் செல்லப்பா ஐயாவை நினைவுக்கப்பால் எங்களில் தொங்கிக்கிடக்கின்ற உங்கள் நினைவலைகள் அறுந்து விடாது ஆழக்கிணற்றில் கிடக்கின்ற எங்கள் மனக்கிணற்றில் வெண்ணிற மண்ணாய் கிடக்கின்றீர்கள் எப்படி உங்களை மறக்க முடியும் ஆலையடி ஆதிவைரவர் ஆலயப்பூசகராய் சில ஆண்டுகள் சிறப்புற வழிநடத்திட்ட உங்கள் ஆளுமையை எப்படி மறப்போமையா! ஆரைப்பற்றை பாகை மக்கள் கூறைதாலி எடுத்து கண்ணகி அம்மன் ஆலயம் ஏக இன்புற்று வந்தோரை வாயார வரவேற்று மாப்பிள்ளை தத்தியாருக்கு மான்புறு செய்கின்ற உங்கள் மாட்சியினை இக்கணமும் நினைத்துப்பார்க்கின்றோம்.

அட அடடா

வெள்ளை மனசுக்காரன்
குற்றமேதுமுண்டோ என்று
குசலம் பலதடவை வினாவி கட்டாடியாரக நின்று
உவகை கொள்வாயே! எப்படி மறப்போம்?

கண்ணகித் தாயின் கருணையை உங்களிடமே நாம் கண்டோம் செல்லப்பர் ஐயாவே! செருக்கில்லா கட்டாடியாரே! உன்னைப்போல் ஓர் உத்தம உன்னைப் பூசாரியாரை நாம் இனி எவ்வுலகிலும் காண்போமா?

இன்று கூடநீங்கள் இல்லா கண்ணகி கோவிலையும்
நீங்கள் இல்லாகோயில் வெட்டையையும்
ஏங்க மறுக்கின்ற எங்கள் மனங்கள்
தொட்டாச் சினிங்கிபோல் சுருங்க்கிடக்கின்றதே
என்ன சொல்வோம்! ஏது செய்வோம்
திசை எங்கும் எதிரொலிக்க உங்கள் கணிரென்ற
குரல் தான் எங்கள் காதினுள் ஊர்கின்றன ஐயா!
ஓம் சாந்தி! ஓம்சாந்தி!! ஓம்சாந்தி!!!

**இவ்வண்ணம்**
ஆலையடி ஆதிவைரவர் ஆலய
அறங்காவல் சபையினர் ஆரையம்பதி

# என்றும் எம்மோடு வாழ்வீர்!

1. மல்லிகைப் பூகாட்டும் வெள்ளை நிறமாக வேட்டியும் சால்வையும் அணிந்து மனம் மகிழ மற்றவரை நோக்கிச் சிரிப்பொன்றைச் சிந்தியவாறு பல் புகழ்படைத்த முத்தமிழ்க் கடலுக்குள் மூழ்கி பவித்திரமான மந்திர கலை யோடு காவியங்களையும் கற்றுத்தேறி நல்லதொரு பூசகராய் ஆரையம்பதி ஊரேமெச்சுகின்ற நல்லவரே! வல்லவரே! பொன்னாச்சிகுடியாரின் உரித்தான பல் உலகும் போற்றித்துதிக்கும் கண்ணகிக்குப் பூசகரானாய்! பூத்தமலர் வாசம்போல் புகழோடு என்றும் வாழ்வான்!

2. கண்ணகி அம்மன் சடங்கு வந்தால் உங்கள் உள்ளமோ குளிர்ந்து கனிந்து பக்திப்பரவசமாய் மாறுவதை கண்ணால் பார்த்து மெய்சிலிர்த்து பக்தர்கள் சிலையாய்க் கிடப்பர்!

3. கண்ணகித் தாயாரின் சிலையை ஏந்தி வருகின்ற நேரம் உண்மையிலே கண்ணகி அம்மன் எழுந்துவருவது போல் தோன்றும் அந்த அற்புதத்தால் இளையதம்பி ஐயா நீங்கள் தெய்வ நிலை அடைந்தீரே!

4. எண்ணம் இனிக்க எல்லோரையும் ஏற்றமுடன் அன்பால் அனைத்து அழியாத புகழோடு வாழ்ந்த நீங்கள் என்றுமே நிலையாக வாழ்வீர்!

5. காளி அம்மன் கோவிலுக்கு உங்கள் உதிரத்தில் விளைந்த மகனைத் தந்தாய்!

6. கண்ணகி அம்மமனைப்போல் காளித்தாயையும் நேசித்து வந்தாய்! ஊழ்வினை வந்து உபத்திரம் செய்த காலமெல்லாம் அழியாத உணர்வோடு தேவியருக்குப் பூசை செய்து ஊரைக்காத்தாய் அழிவில்லை உங்களுக்கு! என்றும் எம்மோடு வாழ்வீர ஐயா! அன்பான மனைவியோடு எழிலான மக்களோடு துன்பமில்லா வாழ்வுகண்டு தூய பூசகராய் வாழந்தாயே! தூய மனத்தோடு உங்களை நேசித்து மோட்ச வீடுகாண காளித்தாயை
வேண்டுதல் செய்கிறோம்.

இவ்வண்ணம் என்றும் உங்கள் அன்பு
மறவாத ஸ்ரீ வீரமாகாளி அம்மன்
திருப்பணிச்சபை ஆரையம்பதி

ஆரையம்பதி கண்ணகி அம்மன் ஆலய பிரதம பூசகர்,

அமரர் கதிரவேலு இளையதம்பி ஐயா,

மதிப்பிற்குரிய ஐயாவின் அமரத்துவத்தையொட்டி ஆரையம்பதி ஸ்ரீ வடபத்திரகாளியம்மன் ஆலயம், தாழங்குடா ஸ்ரீ சந்திமக மாரியம்மன் ஆலயம், முனைத்தீவு பத்திரகாளியம்மன் ஆலயங்களின் பிரதம குரு. விஸ்வப்பிரம்ம ஸ்ரீ சாம்பவி ரட்சகன் அ.கி. சர்வேஸ்வரன் ஐயா அவர்களினதும், ஆரையம்பதி ஸ்ரீ வடபத்திரகாளியம்மன் ஆலய பரிபாலன சபையினரதும் கண்ணீர்ப் பாமாலை.

காவேரிப் பூம்பட்டினத்தின் காலிய நாயகியே,
பாவியெமை ஆழ்பவளே பத்திரையே கண்ணகியே,
சேவித்த சேவகனை சேர்த்தெடுத்துக் கொண்டாயே
பூசித்த இதயம் எல்லாம் பூகம்பம் கண்டதம்மா.

"க்ரவ்யாத" அக்கினியும் தமை கிரகித்துக் கொண்டானோ?
சரியாத சாஸ்த்திரத்தை சயனத்தில் வென்றானோ?
நதியாக நயனங்கள், தம் இறுதிப் பயணத்தில் தொடர்ந்ததையா
கதியான கண்ணகியின் கைமணியை மறந்தீரே!

சூரியன் புதல்வன் செய்த சூதினால் தமை இழந்தோம்
பாரியின் பரம்பரையில் ஓர் பெருமகனை நாம் இழந்தோம்
சனி தேவன் அண்ணனவன் தனியே உமை கொண்டு சென்றான்.
பனி படரும் புல்வெளியாய் கண் இமைகள் கசங்குதையா.

சிரம் தாழ்ந்து தொழுதெழுந்தோம், இரு தரமே பிறந்திறந்தோம்
கரமிரண்டு போதவில்லை கைதொழவே ஐயா, கண்ணிரண்டும்
காணவில்லை கதறிடவே ஐயா, நரன் வடிவில் வந்ததொரு
நல் மனித நாயகரே

# அரன் கொண்டு சென்ற தம்மை வாங்கி வர வரம் ஒன்று இல்லை ஐயா...."

அமரத்துவம் அடைந்த அமரர் கதிரவேலு இளையதம்பி ஐயா அவர்களின் மகத்துவம் குறித்து  நான் அறிந்த விடையங்கள் குறைவேயாகும். அதற்கு காரணம் என் அறியாமையும், அனுபவக் குறைவுமே என்றெண்ணுகிறேன். இருப்பினும் இளையதம்பி ஐயா குறித்த பல்வேறு சிறப்பம்சங்களை செவிவளியே கேட்டறிந்துள்ளேன். சுமார் 87 ஆண்டுகள் ஆரையம்பதி மண்ணில்  வாழ்ந்து அன்னை கண்ணகிக்கு தன்னை அர்பணித்த தலையாய மனிதராய் அவரை நான் வணங்குகிறேன்.

ஐயா அவர்கள் மணி, மந்திர, ஔசதங்கள் பற்றிய பரிபூரண அறிவும், பரிபக்குவமும் கண்டவர். என்பதை உணர்ந்தேன் எம்மைப் போல் வளர்ந்து வரும் இளைய சமுதாயத்திற்கு இளையதம்பி ஐயாவின் வளிகாட்டல்கள் மிகவும் இன்றியமையாதது ஆகும். அந்த வகையில் ஐயாவின் இழப்பு இளம் பூசகர் தலைமுறைக்கு ஈடில்லா இழப்பாகும்.

அன்னையோடு பேசக்கூடிய பரிபக்குவம் கொண்டவர் இளையதம்பி ஐயா அவர்கள். அத்தகைய பக்குவமே அவரை 87 ஆண்டுகள் வரை மண்ணில் இளம் வாலிபன் போல் இயங்க வைத்தது என்பதில் ஐயமில்லை. உற்சவ காலங்களில் ஐயாவின் உற்சாகததைக் கண்டு நான் வியப்படைந்துள்ளேன்.

பள்ளிப் பருவத்தில் ஆரையம்பதி இராமகிருஸ்ண மிஸன் பாடசாலையில் நான் கல்வி கற்று வரும் காலத்தில் ஒரு முறை இளையதம்பி ஐயா அவர்களை வீதியோரத்தில் கண்டு எனது துவிச்சக்கரவண்டியில் ஏற்றிக் கொண்டு அவர் இல்லத்தருகில் இறக்கி விட்டேன். அப்பொழுது அவரின் பாதத்தில் வீழ்ந்து ஆசீர்வாதம் வேண்டினென். அவரும் என்னை ஆசீர்வதித்திருந்தார். அச்சம்பவம் என் மனதில் நிலைபெற்று விட்ட ஒன்றாகும்.

இவ் எளியேனது வயதும், அனுபவமும் மிக மிகக் குறைவானது. அதன் காரணத்தால் இளையதம்பி ஐயா குறித்த பெருமைகளை என்னால் குறைவாகவே எடுத்தியம்ப முடிந்ததை எண்ணி மிகவும் மனம் வருந்துகிறேன். எனது அன்னை ஸ்ரீ வடபத்திரகாளியம்மன் ஆலய பரிபாலன சபையினரும், துர்க்கா இந்து இளைஞர் மன்றத்தினரும் ஐயாவின் இழப்பினால் பெரிதும் மன வேதனையடைந்துள்ளனர். என்பதனையும் இவ்விடத்தில் குறிப்பிட்டுக் கொள்கிறேன்.

ஆரையம்பதி மண்ணும், அன்னை கண்ணகியின் மஹிமையும், இப் புவனத்தில் நிலைபெற்றுள்ள மட்டும் இளையதம்பி ஐயா அவர்களினதும் புகழும் பூமியில் நிலை பெற்றோங்கும் என்பதில் எள்ளளவிலும் ஐயமில்லை.

ஐயாவினதும், ஐயாவின் குடும்பத்தினரதும் மாழாத் துயரில் ஆரையம்பதி ஸ்ரீ வடபத்திர காளியம்மன் ஆலையத்தின் பிரதம பூசகராகிய நானும் எம் அன்னையின் ஆலைய பரிபாலன சபையினரும், மற்றும் துர்க்கா இந்து மன்றத்தினரும் பங்கெடுக்க கடமைப்பட்டுள்ளோம். ஆரையம்பதியின் மூத்த தலைமுறையில் முன்வைத்துப் போற்றப்பட வேண்டியவராகிய அமரர் கதிரவேலு இளையதம்பி ஐயா அவர்களின் ஆத்மா, என்றென்றும் அன்னை கண்ணகியின் பாதார விந்தங்களில் இன்புற்றிருக்க வேண்டுமென எல்லாம் வல்ல ஆதிபராசக்தியை வேண்டி விடை பெற்றுக் கொள்கின்றோம்.

நன்றி

இவ்வண்ணம்.

ஆரையம்பதி ஸ்ரீ வட பத்திரகாளியம்மன் ஆலயம்தாழங்குடா ஸ்ரீ சந்தி மகமாரியம்மன் ஆலயம் முனைத்தீவு ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலயங்களின் பிரதம குரு வஸ்வப்பிரம்ம ஸ்ரீ சாம்பவி ரட்சகன் அ.கி.சர்வேஸ்வரன் ஐயா, மற்றும் ஆரையம்பதி ஸ்ரீ வடபத்திர காளியம்மன் ஆலய பரிபாலன சபையினரும், துர்க்கா இந்து இளைஞர் மன்றத்தினரும்.

## உங்கள் புகழ் என்றுமே நிலைக்கும்

1. கண்ணகை அம்மனுக்குப் பல்லாண்டு காலம் பூசை செய்து கனிவான நெஞ்சத்தோடு ஊரவரை நேசித்தாய்! புன்னகை சிந்தி படம் போட்ட தங்கமாய் வாழ்ந்து பூவுலகில் புகழ் பூத்த மனிதராய்த் திகழ்ந்தவரே! மண்ணுக்குப் பக்திகாட்டி பரவசத்தை அள்ளித்தந்த மதுரையை எரித்து மாண்புறு கற்புக்கு இலக்கணமான கண்ணகையை நேரில் கண்டு தெய்வ நிலையை அடைந்தவரே கோவில் கொள்ள தாயாரின் இருப்பிடம் சென்றாயோ

2. வைகாசித் திருநாளில் கண்ணகை அம்மனின் திருக்குளித்திக்காண்பதற்கு வைகைப்புனலாய் மக்கள் திரள்வர்! அந்த வேளையில் நீங்கள் ஐயா பகை அற்ற நெஞ்சாய் பக்தி உருவமாய் வலம்வருவீர்! பண்பின் இருப்பிடமே! மந்திரத்தோடு காவியமும் கற்றவரே. வகை வகையாய் மந்திரத்தை உச்சாடனம் செய்து விண்தாவக் குரல் எழுப்பி ஆடுகின்ற தெய்வங்களை ஆட்டுவிப்பீர்! தொகை தொகையாக் கூடுகின்ற கண்ணகை அம்மன் வீதியிலே தொன்மை பூத்த காவியத்தை இனிதாகப் பாடிடுவீர்!

3. உங்கள் இழப்பு ஆரையம்பதி மண்ணுக்கே பேர் இழப்பாம்! இளையதம்பி ஐயாவே இனிதாக செல்லப்பர் என்று ஊரார் தங்க உணர்வோடு அழைப்பார்! எங்களை விட்டுப் பிரிந்தாலும் தூய பூசகரே! உங்கள் நாமம் என்றுமே அழியாது! எங்கும் புகழ் வீச இனிப்பாக உறைந்திடுவீர்! ஓயாது! ஓயாது! உங்கள் புகழ் என்றுமே நிலைத்திருக்கும்! பங்கம் இல்லாமல் உங்கள் ஆத்மா சாந்தி பெற பூத்த மலரான முருகப் பெருமானை வேண்டுதல் செய்கின்றோம்!

**இவ்வண்ணம்**

**ஸ்ரீகந்தசுவாமி ஸ்ரீ கண்ணகை**

**ஸ்ரீவீரமா காளி அம்மன் ஆலயங்களின்**
**அறங்காவல் சபையினர் ஆரையம்பதி.**

# உங்கள் நாமம் என்றும் நிலைத்துவாழும்

1. பொல்லாப்பு நிறைந்த பாவம் செறிந்த பூமியிலே பல்லோரும் போற்ற பண்பாளராக வாழ்ந்தவரே! தொல்லைகள் வந்த போதும் துயரத்தை அண்டவிடாமல் தெய்வீக நிலையடைய தேவி கண்ணகியை பூசித்து வந்தீர்! கொல்லையில் பூத்து மணத்தை இறைக்கின்ற குண்டுமல்லிகை போல் கண்ணியமாய் வாழ்ந்து கண்ணகைத்தாய்க்குத் தொண்டுசெய்தீர்! எல்லயில்லாப் பக்திகொண்டு ஏற்றமுடன் மந்திரத்தைக்கற்றுத்தேறி உள்ளத் தெளிவோடு காவியத்தை இனிமையாகப் பாடிவந்தீர்!

2. நடுத்தெருப் பாகையாரின் ஏற்றமுள்ள திருவிழாக் காலங்களில் நன்றாகச் சேவை செய்து அளப்பெரிய தொண்டு செய்தீர்! படுகளம் போட்ட தெய்வங்கள் மந்திர உச்சாடனம் செய்து பெரும் சத்தம் போட்டு ஆட உங்கள்மந்திரம் உயிர் ஊட்டும்! கடுமையாக உழைத்து கண்ணகையின் பூசாரியாய் பல ஆண்டு சேவைசெய்து குளிர்த்தி ஆடும்போது உங்கள் திரு உருவம் கண்ணகையாகச் காட்சிதரும் மிடுமை அகல ஆரையம்பதி மண்ணிலே எல்லோரும் நன்றாகவாழ கண்ணகித் தாயை வேண்டுதல்செய்தீர்! உங்கள் நாமம் என்றும் நிலைத்து வாழும்

3. நடுத்தெருப் பாகையார் உங்கள் இழப்பினால் துயர் கொண்டார்! நல்லவராய் வாழ்ந்து எல்லோரையும் அன்பால் நேசித்து உடுகு அடிப்பதிலும் இனிமையாகக் காவியம் பாடுவதிலும் உரத்த மந்திரம் சொல்லி தெய்வங்கள் ஆட்டுவிப்பதிலும் அடியாரை அணைத்து அவர்துயரங்கள் தேவியிடம் எடுத்துக் கூறி அருள் செய்யும் பூசகராய் வலம்வந்த இளையதம்பி ஐயாவே எட்டுத்திக்கும் உங்கள் புகழ் பேசும் என்றும் நிலையான மோட்சம் காண எல்லாம்வல்ல கண்ணகித்தாயை நடுத்தெடுப்பாகையார் உள்ளன் போடு வேண்டுதல் செய்கின்றா இப்படிக்கு உங்களை என்றும் நேசிக்கும் நடுத்தெருப்பாகைமக்கள் ஆரையம்பதி

இப்படிக்கு உங்களை என்றும் நேசிக்கும் நடுத்தெரு பாகை

**மக்கள் ஆரையம்பதி**

# என்றும் அழியாது உங்கள் நாமம்

1. கண்ணியமான உணர்விலே பக்திநெறியைக் கடைப்பிடித்து கண்ணகை அம்மன் பூசகராய்த் தொண்டு செய்தவரே! புண்ணியமான காரியங்கள் பூத்துமணக்க வைத்தவரே! பாவகாரியம் செய்யாமல் தமிழ்ப்பண்பு சிறக்கவாழ்ந்தவரே! மண்ணில் என்றும் உங்கள் நாமம் மலர்ந்துபூவாய் விரித்திடுகே! மங்கையர் திலகக் கண்ணகித்தாயார் மனம்குளிரப் பூசை செய்தவரே! என்றும் உங்கள் நாமம் அழியா! ஆரையம்பதி மக்கள்மனதில் ஓவியமாகப் பதிந்திடுவீர்! என்றும் சிறப்பாய் நிலைத்திடுவீர்!

2. இளையதம்பி அண்ணா எங்களுக்குச் குருபோல இருந்தவரே! அழகாக மந்திரத்தை உச்சாட்னம் செய்து நாளும் விழிப்பான தெய்வங்கள் உருவேற்றி ஆடவைப்பாய்! எழிலான கண்ணகிவரலாற்றை இசையோடுபடித்து இனிக்கவைப்பாய் அழியாது! அழியாது! உங்கள் நாமம் உயர்ந்தோங்கி இமயம் போல் வளர்ந்தே நிற்கும்! பழிபாவம் கொள்ளாது சிரித்தமுகத்தோடு வலம் வந்த எங்கள் ஐயா! பொன்னுலக மோட்சவீடு நிலையாகச் கிடைத்திடவே தூயமனத்தோடு முருகப்பெருமானை வேண்டு கின்றேன்!

**இப்படிக்கு**

**சி. வாமதேவன்**

**உங்கள் அன்பு மறவாத முன்னால் கல்விப்பணிப்பாளர்**

**ஆரையம்பதி.**

# நீங்கா நினைவுகள்

அமரத்துவம் அடைந்த கதிரவேலு இளையதம்பி பூசகர் அவர்கள் முன்னாள் பூசகர் அமரர் சின்னத்துரை பூசகர் ஐயா அவர்களின் அடியொத்தி அவரைத் தொடர்ந்து சுமார் 42 வருடங்கலுக்கு மேலாக கண்ணகை அம்மன் ஆலயத்தின் பிரதம பூசகராக பக்திசிரத்தையுடன் கண்ணகைத் தாயாரின் பாதங்களைத் தொட்டு பூசித்தவன் என்று சிறப்புடனும் இரக்க சிந்தையும் கள்ளம் கபடமற்றகுணமும் நீதி பிறளா நெறிமுறையுடன் வழி நடந்தவர் என்பதன் ஐயா அவர்களுக்கு சுடுசொல்லும் தெரியாது கடும் போக்கும் அறியாது என்றும் இனிமையாக மற்றவர்களை அணைத்து வழிநடத்தியவர். எமது ஊரில் எத்தனையோ விடயங்கலுக்கும் நபர்கலுக்கும் எதிராக விமர்சனங்கள் எல்லாம் ஏற்பட்டிருக்கின்றது ஆனால் ஐயா அவர்களைப் பற்றி அவருக்கு ஏதிராக கருத்துக்களோ விமர்சனங்களோ ஏற்பட்டதில்லை என்பது அவர் வாழ்ந்த வாழ்க்கைக்கு ஒரு எடுத்துக் காட்டாக உள்ளது எனலாம்

மதிப்போடு பண்போடும் எல்லோராலும் "செல்லப்பர்" என செல்லமாக அழைக்கப்பட்ட ஐயா அவர்கள் அன்னை கண்ணகை அம்மனின் அருட் சேவைக்கு இன்னுமொரு, ஒழுக்கசீலமுள்ள, பற்றுறுதி நிறைந்த பூசகர்களை உருவாக்கித்தந்து விட்டு சென்றிருப்பது அவரது சேவையின் இன்னுமொரு மகத்தான பணியாகும்.

ஐயா அவர்களின் மறைவு, எமது ஊருக்கும், பாரம்பரிய மரபுமுறை பூசகர் வழித்தோன்றல்களுக்கும் ஏற்பட்ட பாரியதொரு இழப்பாக உள்ளது என்றால் அது மிகையாகாது. ஐயா அவர்கள் இன்று எம்மோடு இல்லை என்றாலும் எல்லோர் மனதிலும் நிறைந்தவளான எனறும் மறக்க முடியாத ஒரு மனிதராக மறைந்தும், மறையாத மனிதனாக வாழ்ந்து கொண்டிருக்கின்றார்.

அன்னாரின் இன்றைய 31ம் நினைவுநாளில் ஐயா அவர்களின் ஆத்மா சாந்தி பெற அன்னை மாரித்தாயின் பாதர விந்தங்களை பணிந்து இறைஞ்சுகின்றோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

நீங்கா நினைவுகளுடன்
ஆரையம்பதி வம்மிக்கேணி
ஸ்ரீ முத்துமாரியம்மன்
ஆலய பரிபாலன சபையினர்

## அணையா ஜோதி
## அக்கினியில் சங்கமம்

ஆரையம்பதி எனும் சிவப்பதியிலே அட்டதிக்கென்றில்லாமல் பார்க்குமிடமெங்கும் நீக்கமற தெய்வங்களின் ஆலயங்கள், அழகு பொருந்தும் குளைகள் , வாவி, சமுத்திரம் என பல்வகையான இயற்கை வனப்பு நிறை ஊரிலே பல நூற்றாண்டு கால வரலாற்று ரீதியானதும், மரபு ரீதியானதுமான வழிபாட்டைக் கொண்ட பத்தினித் தெய்வம் கண்ணகைத் தாய்க்கு பூசை வழிபாடுகளை இயற்றி சக்தியின் திருப்பாதங்களைச் சென்றடைந்த சக்தி உபாசகர் பெரு மதிப்பிற்குரிய பிரதம பூசகர் திரு.க.இளையதம்பி ஐயா அவர்களுக்கு எமது ஸ்ரீ முருகன் இந்து மன்றம் அன்னாரின் அமரத்துவம் குறித்த நினைவு மலரிற்கு ஓர் சிறிய குறிப்பை தருவதில் உள மகிழ்வு கொள்கின்றது.

அன்னார் சிறந்த சமயப் பற்றுள்ள குடும்பத்திலே பிறந்து சமயத்திற்காகவும், சமூகத்திற்காகவும் ஆற்றிய தொண்டுகள் அளப்பரியது. அன்னாரின் கனிந்த உள்ளமும், மலர்ந்த முகமும், தெய்வபக்தியும் அன்னாரை அருள்மிகு ஸ்ரீ கண்ணகை அம்மனுக்கு பிரதம பூசகர் என்ற உச்சத்திற்கு இட்டுச் சென்றது.அவரின் குரு மூலமாகப் பெற்ற விதிமுறைகளை எள்ளளவும் பிசகாமல் பத்ததி விதிமுறைகளுக்கு அமைவாக அம்மனுக்கு பூசை செய்து அக்கினி தெய்வமான அம்மனை சந்தோசப்படுத்தி குளிர்மையாக்கி இந்த ஊரிலே எந்த குறையும் வாராமல் மக்கள் அனைவரும் இன்புற்றிருக்க அன்னாரின் சேவை உன்னதமாக காணப்பட்டது. அன்னாரின் சமுகப்பணிகள் என குறிப்பிடும்போது அன்றொரு காலம் ஆரையம்பதி (தற்போதய சமாதடிப்பிள்ளையார் ஆலய வளாகத்தின் முன் மகாவிஸ்னு ஆலயத்தில் கம்சன் வதைஅமுது மிகசிறப்புடன் பெரியளவில் ஊருக்கே அன்னதானம் செய்த காலம் , அவ்வாறான அன்னதானப்பணிகளுக்கு அவர் ஆற்றியசேவை, ருக்மணி அம்மன் உற்சவம், முருகன் கோயில் திருவிழா இவ்வாறான ஆலய விழாக்களில் தவறாமல் வெண்ணிற ஆடையுடன் புனிதமாக பக்தியுடன் தனது பங்களிப்பை நல்குவார்.

அதுமட்டுமல்லாமல் கல்வீட்டுத்திண்ணையடி ஸ்ரீபரம நயினார் ஆலயம் , ஆலயடி ஆதிவைரவர் ஆலயம் போன்ற ஆலயங்களிலும் பிரதம பூசகராக பணியாற்றி அத்தெய்வங்கள் கருணைக்கு பாத்திரமானவர். தாமரைப்பொய்கை வீரமாகாளி அம்மன் ஆலயத்திற்கும் தன்னாலான பணியைச் செய்வார் குறிப்பாக கண்ணகை ஆலய சடங்கு காலங்களில் அன்னார் அடியார்களுடன் பழகும்விதம், அனைவரிடமும் ஒரே விதமான அன்பு, பரிசு, சின்னஞ்சிறார்கள் மீது காட்டும் காருண்யம் மதிநுட்பமான பேச்சு என்பவை என்றுமே காலத்தால் அழியாதவை. அதே போல் அக்காலத்தில் நம் மக்களை வாட்டி வதைத்த அம்மை நோய் , கண்நோய் கூவாக்கட்டு போன்ற நோய்களுக்கான வைத்தியம், சின்னஞ்சிறார்களுக்கான கண்ணூறு, பயம் போன்றவற்றிக்கு திருநீறு பூசி சுகமாக்கும் பாங்கு இன்னும் நம் ஊர் மக்களின் மனதில் ஊசலாடும், அம்மனுக்கும் அவரிற்கும் உள்ள தொடர்பு மந்திரங்களுடன் அவர் கொண்ட பரிட்சயம் அவர் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்த நம்மவர் அனைவரிற்கும் தெரியும். அவரது அந்திமக் காலத்தில் கூட அவரது கணீர் என்ற குரலில் அம்மனின் அகவல் , காவியங்கள் என்பவற்றை பாடியதை நாம் கேட்டிருக்கின்றோம். வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும் என்னும் தெய்வப் புலவர் திருவள்ளுவரின் குறட்பாவிற்கு அர்த்தம் தந்த அந்த உத்தமருக்கு என்றும் எமது சிரம் தாழ்ந்த வணக்கங்கள்.

கடிமலர்க் கொன்றைச் சடைமுடிக் கடவுளை
ஒழிவருந் சிவபெரும் போகவின் பத்தை
நிழலெனக் கடவா நீர்மையொடு பொருந்தி
எனதற நினைவற விருவினை மலமற
வரவொடு செலவற மருளற விருளற
இரவொடு பகலற விகபர மறவொரு
முதல்வனைத் தில்லையுள் முளைத்தெழுஞ் சோதியை
அம்பலத் தரசனை யானந்தக் கூத்தனை
நெருப்பினி லரக்கென நெக்குநெக் குருகித்
திருச்சிற் றம்பலத் தொளிருஞ் சிவனை
நினைமின் மனமே! நினைமின் மனமே!
சிவபெரு மானைச் செம்பொனம் பலவனை
நினைமின் மனனே! நினைமின் மனனே!

த.நட்சனாமூர்த்தி
கௌரவ செயலாளர்
ஸ்ரீ முருகன் இந்து மன்றம்
ஆரையம்பதி.

## " பொன்னாச்சி குடியின் குல விளக்கு அணையா தீபம் "

சுவடுகளின் வழியில் ஆரையம்பதியில் பலகுடிமக்கள், பலகுல மக்கள் மண்ணுக்கு வளம் சேர்த்தால் போல் உள்ளனர். அந்த வகையில் ஆரையம்பதியிலுள்ள மூத்த பல குடிகளில் பொன்னாச்சி குடியும் ஒன்று. ஆரையம்பதி கண்ணகை அம்மன் ஆலயத்திற்கு எத்தனை நூற்றாண்டு வரலாறோ அத்தனை நூற்றாண்டு வரலாற்றைக் கொண்டதே இந்த பழம் பெரும் குடி. கண்ணகை தாங்கு பாரம்பரியமான பத்ததி முறையிலான பூசை முறையை இந்த குடியினரே செய்கின்றனர். இதுவே இதற்கு சாட்சியாக அமைகின்றது. இவ்வாறான பழம்பெரும் குடியிலே பிறந்த உத்தமர் எங்கள் குலதீபம் அமரர். திருவாளர் .க. இளையதம்பி அவர்கள். எங்கள் குடியிலுள்ள மக்களிற்கு சிறந்த தம்பியாக, அண்ணனாக, பெரியப்பாவாக, சித்தப்பாவாக, மாமாவாக, சிறந்த மகனாக வாழ்ந்த பெருந்தகை. எங்கள் அனைவரையும் கவர்ந்திழுக்கும் இவரது புன்சிரிப்பு, பணிவு, மென்மை யாவரையும் தம்பக்கம் ஈர்த்துவிடும் பக்குவம் கொண்டவர். தினமும் அதிகாலை எழுந்து காலைக்கடன் கழித்து கண்ணகை அம்மன் ஆலயம் சென்று தீர்த்தக் கிணற்றில் நீராடி வெள்ளை வேட்டி அணிந்து முதலில் சூரிய வணக்கம் செய்து பின்னர் அம்மனை வழிபட்டு தன்வீடு செல்லாமல் சகோதரியின் வீடு, சகோதரியின் பிள்ளைகள் வீட்டிற்கு தினமும் வருவார். இது அவரது இனம் சார்ந்த பற்றுக்கு உதாரணமாகும். எங்கள் குல சிறார்களிற்கு தினமும் ஓர் இனிப்பு வழங்குவார். காலையில் கொடுப்பதற்காகவே முதல்நாள் பின்னேரத்தில் ரொபிகளை வாங்கி வைப்பார். இது அவரது வழமை. அதுமட்டுமல்ல உறவுகளுக்கிடையே ஏதாவது மனக்கசப்பு இருந்தால் அதை நீடிக்க விடமாட்டார் இருதரப்பினரிடையும். நாசுக்காக பேசி ஒற்றுமையாக்குவார் நாம் அறிந்த காலத்திற்கு அவர் யாரைப்பற்றியும் ஒரு குறை கூட பேசமாட்டார். என்னதான் பிரச்சனை என்றாலும் அவரது பாஷையில் அதெல்லாம் சரி விட்டுப்போட்டு வேலையைப் பாருங்கள் என்றே கூறுவார். தான் சார்ந்த குடியின் பணியாக கண்ணகை அம்மனுக்கு மிகவும் திறம்பட தொண்டாற்றியவர் எளிமையானவர், அன்பானவர், பண்புள்ளம் கொண்டவர் என்றால் மிகையாகாது. தான் அந்த குடிமக்களின் முன்னேற்றத்திற்காகவும் அவர்களின் விடிவிற்காகவும் தன்னாலான உதவிகளைச் செய்தவர். இத்தருணத்தில் அவரது குடும்பத்தைப் பற்றியும் குறிப்பிட்டேயாக வேண்டும். அவரது குடும்பத்தில் மனைவிக்கு ஏற்ற நல்ல கணவராகவும், பிள்ளைகளுக்கேற் தகுந்த தந்தையாகவும் பேரப்பிள்ளைகளுக்கேற்ற அம்மப்பாவாகவும், அப்பப்பாவாகவும் அவரது மனைவியின் சகோதரர்க்கு நல்ல மைத்துனராகவும் வாழ்ந்தவர். அதேபோல் அவர்களும் இவரை தாங்கள் வணங்கும் தெய்வம் போலவே மரியாதை செலுத்தி வாழ்ந்தனர். எதுவிற்கும் ஆசைப்படாத ஞானி என்றே கூறலாம்.

தந்தை மகற்கு ஆற்றும் உதவி இவன் தந்தை
என்னோற்றான் எனும் சொல் எனும் சொல்.

தந்தை மகற்காற்று உதவி நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல்.

தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று.

மேற்குறித்த குறட்பாவிற்கமைய வாழ்ந்து காட்டிய குலதீபம் எங்கள் மாமா.

விட்டுவிடப் போகுதுயிர் விட்டவுடனேயுடலைச்
சுட்டுவிட்டுப் போகிறார் சுற்றத்தார் — பட்டதுபட்
டெந்நேரமுஞ்சிவனை யேத்துங்கள் போற்றுங்கள்
சொன்னேன் அதுவே சுகம்.

பொன்னாச்சி குடி சார்பாக
த.தட்சணாமூர்த்தி

# சில சித்த மருத்துவ குறிப்புக்கள்



**தலை சுற்று குணமாக :-** சுக்கு, மிளகு, திப்பிலி, விலாமமிச்சை வேர், சீரகம் ஆகியவைகளை 5 கிராம் வீதம் பவுடராக்கி தினசரி காலை மாலை ½ கரண்டி சாப்பிட தலை சுற்று குணமாகும்.

**இருமல் குணமாக :-** அரசமரப்பட்டையை காயவைத்து வறுத்து கரியானவுடன் தூளாக்கி 1 டம்ளர் நீரில் 1 கரண்டி போட்டு கொதித்ததும் வடிகட்டி சக்கரை பால் சேர்த்து குடிக்க இருமல் குணமாகும்

**ஜல தோஷம் குணமாக :-** ஜல தோஷம், காய்ச்சல் தலைவலி போன்றவற்றிக்கு பனங்கிழங்கை அவித்து காயவைத்து இடித்து பொடியாக்கி பனங்கல் கண்டு சேர்த்து சாப்பிட்டால் ஜலதோஷம் குணமாகும்.

**சளி கட்டு நீங்க :-** தூதுவளை, ஆடா தோடை, கண்டங் கத்தரி இலை, சுக்கு, மிளகு, திப்பிலி சேர்ந்து கஷாயம் செய்து சாப்பிட சளி கட்டு குணமாகும்.
**நெஞ்சு சளி :-** தேங்காய் எண்ணெயில் கற்பூரம் சேர்த்து சுடவைத்து நெஞ்சில் தடவ நெஞ்சு சளி குணமாகும்.

**தலைப்பாரம் குறைய :-** நல்லெண்ணையில் தும்பை பூவைப் போட்டு காய்ச்சி தலையில் தேய்த்து குளித்து வர தலைப்பாரம் குறையும்.

**கடுமையான தலைவலி :-** ஐந்தாறு துளசி இலைகளும் ஒரு சிறு துண்டு சுக்கு 2 இலவங்கம் சேர்த்து மை போல அரைத்து நெற்றில் பற்றாக போட்டால் தலைவலி குணமாகும்.

**மூச்சு வாங்குதல் :-** தூதுவளை உண்பதால் குணமாகும்

**நெஞ்சு தடுமல் குணமாக :-** வெற்றிலை சாறு, இஞ்சி சாறு கலந்து கண்ணாடி டம்ளரில் வைத்து தெளிந்த நீரை மட்டும் எடுத்து தேன் சேர்த்து 3 வேளை சாப்பிட்டால் குணமாகும்.

**ஒற்றை தலைவலி :-** துளசி இலை நல்வேள இலை அருகம் புல் வெற்றிலை இவைகளை கைபிடி அளவு சேர்த்து கசக்கி பிழிந்து எக்தப்பக்கம் தலை வலிக்கிறதோ அதற்கு எதிர்பக்கம் காதில் விட வேண்டும் தொடர்ந்து 3 நாட்கள் செய்து வந்தால் ஒற்றை தலைவலி நீங்கும்.

**பித்த வாந்தி நிறுத்த :-** வேப்பம் பூவை வறுத்து பொதி செய்து பருப்பு ரசத்துடன் கலந்து சாப்பிட வாந்தி நிற்கும்.

**தொடர் இருமல் குணமாக:-** கண்டல் கத்தரிவேரை அரைத்து வெள்ளாட்டுப்பாலில் காய்ச்சி குடி குணமாகும்.

**குழந்தைகளுக்கு ஏற்படும் தொடர் இருமல் குணமாக :-** கண்டங்கத்திரி வேரை மையாக அரைத்து வெள்ளாட்டுப்பாலில் தினசரி 3 வேளை கொடுக்க குணமாகும்.

**கண் எரிச்சல் நீங்க :-** அதிமதுரம், கடுக்காய், திப்பிலி மிளகு சேர்த்து வறுத்து பொடி செய்து தேனில் கலந்து சாப்பிட கண் எரிச்சல் நீங்கும்.

**கண் பிரகாசம் பெற :-** தூதுவளைக்காய் கூறு காய் செய்து சாப்பிட கண் ஒளி பெறும்.

**மாலைக்கண் குணமாக :-** கருந்துளசி இலையை கழுவி கசக்கி சாறெடுத்து கண்ணுக்கு 2 துளி 2 கண்களுக்கும் காலை மாலை என 9 நாள் விட்டு வந்தால் மாலை கண் நீங்கும்.

**கண்களில் சதை வளருவதை தடுக்க :-** பிரப்பந்தண்டு இலை சாறு பால் ஒரு துளி கண்ணில் விட்டால் சதை வளர்வது தடைப்படும்.

**இருமல் சளியுடன் வரும் இரத்தத்தை நிறுத்த :-** ஆடாதோடை இலையை பொடி செய்து 5 கிராம் தேன் கலந்து சாப்பிட்டு வர 3 நாளில் குணமாகும்.

**கண் நோய் :-** முருங்கை கீரை சாப்பிட கண் நோய் தீரும்.

**காதுவலி குணமாக :-** வாழைப்பட்டையை தீயில் வாட்டி சூடேற்றி பிழிந்து காதில் விட காது வலி குணமாகும்.

**காதில் சீழ் வடிதல் :-** நாயுருவி இலையை இடித்து சாறு எடுத்து 2 சொட்டு காதில் விட சீழ் வடிதல் நிற்கும்.

**காது அடைப்பை நீக்க :-** தூதுவளை சாறு 2 சொட்டு காதில் விட்டுவர காது அடைப்பு நீங்கும்.

**காதுகுடைச்சல் குணமாக :-** ஊமத்தைப்பூவை பிழிந்து சாறு எடுத்து 2 துளிகள் காதில் விட்டால் காதுகுடைச்சல் குணமாகும்.

**செவிட்டு தன்மை குறைய :-** ஆட்டுப்பால், நல்லெண்ணெய், வில்வகாய், கோசலம் இவைகளை ஒன்றாக காய்ச்சி ஆறவைத்து சில சொட்டுகள் காதில் விட்டு வர செவிட்டுத்தன்மை நீங்கும்.

**தொண்டை புண் ஆற :-** வேப்பம் பூவை கொதிநீரில் போட்டு அதன் ஆவியை தொண்டையில் படும் படி செய்தால் தொண்டை புண் ஆறும்.

**தொண்டை நோய் :-** மாதுளம் பூ சாற்றை சாய்ச்சி வடிகட்டி அதனுடன் தேனும் கலந்து சாப்பிட தொண்டை நோய் குணமாகும்.

**விக்கல் குணமாக :-** நெல்லிக்காய் இடித்து சாறு பிழிந்து தேன்சேர்த்து சாப்பிட்டால் விக்கல் தீரும்.

**நக சுற்று :-** மஞ்சள், அருகம்புல், சுண்ணாம்பு கலந்து பூசிவர நகசுற்று குணமாகும்.



**தும்மல் நிற்க :-** தூதுவளை பொடியில் மிளகு பொடிகலந்து தேனில் அல்லது பாலில் சாப்பிட தும்மல் குணமாகும்.

**காசநோய் குணமாக :-** செம்பருத்தப் பூவை எடுத்து சுத்தம் செய்து மையாக அரைத்து உருண்டைலாக எடுத்து காலையில் வெறும் வயிற்றில் சாப்பிட்டு வர பூரணகுணம் கிடைக்கும்.

**பல்நோய் குணமாக :-** புதினா இலையை காயவைத்து சம அளவு உப்பு சேர்த்து மீண்டும் அரைத்து தூளாக்கி காலை மாலை பல் துலக்கி வர பல் நோய்குணமாகும்.



**பல் ஆட்டம் குணமாக :-** வாழை மரப்பட்டையை கரியாக்கி பொடி செய்து பல் தேய்ந்து வர பல் ஆட்டம் குணமாகும்.

**தொப்பை குறைய :-** சுரக்காய் வாரம் 2 தடவை சாப்பிட தொப்பை குறையும்.

**வயிற்று கடுப்பு :-** மாதுளம்பூவை கஷாயம் செய்து குடிக்க வயிற்று கடுப்பு குணமாகும்.

**குடல் புழுக்கள் அழிய :-** மாதுளம் பழம் சாப்பிட்டு வந்தால் குடல் புழுக்கள் அழியும்.

**உடம்பிலுள்ள விஷங்கள் இறங்க :-** வெற்றிலையும், மிளகும் சேர்த்து அரைத்து 2 கிராம் உட் கொள்ள உடல் விஷம் குறையும்.

**வாயுவை கட்டுப்படுத்த :-** சுக்கான் கீரையை பருப்புடன் சேர்த்து உண்டு வர வயிற்றிலுள்ள வாயு குறையும்.

**மலச்சிக்கல் நீங்க :-** வல்லாரை, துளசி, நாயுருவி, வில்பம், எலுமிச்சை, முள்முருங்கை, அம்மான் பச்சரிசி, அரச இலை, அகத்தி இலை ஓரிதழ் தாமரை, பொழுதலை, தூதுவளை, கண்டங்கத்தரி, நெருஞ்சி இந்த இலைகளை [illegible] செய்து தினசரி ¼ கரண்டி சாப்பிட்டு வர மலச்சிக்கல் ஏற்படாது.

**கை கால் எலும்பு முறிந்து ஒட்டவைக்கும் மூலிகை :-** எலும்பு முறுக்கி இலை, ஆட்டுப்பால் விட்டு அரைத்து உள்ளுக்கம் சாப்பிட்டு வர முறிந்த எலும்பு சேர்ந்து விடும்.

**மூட்டு வலி குணமாக :-** அத்திபாலை பத்துப்போட்டு வர மூட்டு வலி குணமாகும்.

**கை, கால் வாதவலி :-** மாவிலங்க இலை சாறுடன் சம அளவு தேய்காய் பால் சேர்த்து காய்ச்சி வெறும் வயிற்றில் 100 மி.லீற்றர் குடித்து வர கை, கால் வாதவலி, வாப்பிடிப்பு நீங்கும்.

**பித்த வெடிப்பு குணமாக :-** வெண்மருந்து இலையை பாலில் அரைத்து காய்ச்சி சாப்பிட்டு வர பித்த வெடிப்பு நீங்கும்.

**சுளுக்கு :-** வெள்ளை பூண்டு, உப்பு, புளிய இலையை அவித்து சூட்டுடன் சுளுக்குள்ள இடத்தில் ஒத்தணம் கொடுத்து கட்டவும் சுளுக்கு நீங்கும்.

**வெண்புள்ளி குறைய :-** குண்டுமணி சாற்றுடன் வெண்கொடி வேலன் வேரும் சேர்த்து அரைத்து அதனை வெண்புள்ளி உள்ள இடத்தில் தடவகுணமாகும்.

**உதட்டில் வெள்ளை மாற :-** வில்வமரத்தின் காயை உடைத்து அதன் மேல் ஓட்டை தாய் பால் விட்டு தேய்க்க மைபோல் வரும் அந்த மையை உதட்டில் தடவி வர வெள்ளை மாறும்.

**படுக்கப்புண் ஆற :-** கருக்காயை தணலில் வாட்டி பின் இடித்து தூளாக்கி தேய்காய் எண்ணெயில் கலந்து பூசி வர ஆறும்.

**கடுங்காய்ச்சல் குணமாக :-** கோரைக்கிழங்கை கழுவி சுத்தம் செய்து நீர்விட்டு காய்ச்சி குடித்தால் கருங்காய்ச்சல் குணமாகும்.

**மூளைக்காய்ச்சல் :-** திருநீற்று பச்சிலை சாறு, தும்பை இலை சாறு, கற்பூரம் சிறிது சேர்த்து மூக்கில் உறிஞ்ச குணமாகும்.

**மூலம் குணமாக :-** ஆவாரம் பூவை நிழலில் உலர்த்தி அருகம்புல் வேர் எடுத்து உலர்த்தி பொடி செய்து 1 ஸ்பூன் அளவு பசுநெய்யுடன் சாப்பிட்டு வர மூலம் குணமாகும்.

**இரத்த ... குணமாக :-** அருகம்புல் வேர் சேர்த்து அரைத்து பசும்பாலில் சாப்பிட இரத்த மூலம் குணமாகும்.

**மூச்சு திணறல் :-** ஆவாரையின் பஞ்சாங்கச்சூரணம் 10 கிராம் வீதம் காலை, மதியம், மாலை வெந்நீருடன் கொள்ளத் தீரும்.

**நுரையீரல் புண் :-** ரோஜாப்பூவுடன் 2 எடை சீனா கற்கண்டு கலந்து பிசைந்து சிறிது தேன் கலந்து 5 அல்லது 6 நாட்கள் வைக்க சூல்கந்து ஆரும் பின் காலை மாலை கழற்சிக் காயளவு சாப்பிட நுரையீரல் புண் குணமாகும்.

**இரத்தக் கொதிப்பு குணமாக :-** அகத்தி கீரையை வாரம் 2முறை சாப்பிட்டால் சரியாகும்.

**இதயவலி குணமாக :-** துளசி விதை 100 கிராம், பன்னீர் 125 கிராம், சர்க்கரை25 கிராம் ஒன்றாக கலக்கி 2 வேளை சாப்பிட இதயவலி குணமாகும்.

**நெஞ்சு வலி குணமாக :-** வெண்மருந்து இலையை பாலில் அரைத்து காய்ச்சி சாப்பிட்டு வர பித்த வெடிப்பு நீங்கும்.

**நாய்கடி விஷம் :-** நாய் கடித்த கடிவாயில் எருக்கன் பால் 2 - 3 சொட்டு விட விஷம் முறியும்

**பாம்பு விஷம் :-** வன்னிமரத்தின் இலை காய் பட்டையை காயவைத்து பொடியாக்கி கடலை அளவு ½ கரண்டி தேனுடன் கலந்து காலை, மாலை 7 நாட்கள் குடிக்க கொடுக்க தேள், பாம்பு, பூரான் எந்த விஷமானாலும் முறியும்.

**சிறுநீரக வியாதி குணமாக :-** கீழாநெல்லி இலைகளை கற்கண்டு சேர்த்து சாப்பிட்டு வர சிறுநீரக வியாதி குறையும்.

**சிறுநீர் கோளாறு நீங்க :-** முலாம்பழம் சாப்பிட்டால் குணமாகும்.

**இளம் பிள்ளை வாதம் :-** நொச்சிக்குடிநீர் 30 மில்லி லீற்றர் வீதம் காலை, மாலை 1 வாரம் கொடுத்தால் வாதம் குணமாகும்.

**வாதம் :-** கொன்றை வேர்பட்டை 100 கிராம் 1 லீட்டர் நீரில் ... 30 மினிட் ... ராக காய்ச்சி காலை, மாலை குடித்து வர வாத ...

## மண்ணுக்கும். மக்களுக்கும் பெருமை தேடி மாண்புற வாழ்ந்த ஒரு மனிதர்தான் அமரர் கதிரவேல் இளையதம்பி

மரணம் என்பது ஆறிலும் வரும் நூறிலும் வரும் என்பது ஆன்றோர் வாக்கு மரணம் யாருக்கும் வரும் எந்த நேரத்திலும், எந்தவடிவத்திலும் வரும் என்பதே கருடபுராணம் கூறுகின்ற உண்மை. மரணத்தில் இருந்து யாருமே தப்ப முடியாது என்பதே உண்மை எது நடந்ததோ அது சரியாக நடந்தது என்றும் நடக்கப் போவதும் சரியாக நடக்கும் என்பதும் நாம் இந்த உலகத்திலே கொண்டு வந்தது ஒன்றுமில்லை. கொண்டு செர்வதும் ஒன்றுமில்லை. கொடுக்கப்பட்டதெல்லாம் எடுக்கப்படும் என்பதே கீதை கூறுகின்ற தத்துவம் ஜனனம் மகிழ்ச்சியைத் தருகின்றது . மரணம் வேதனையைத் தருகின்றது. வேதனையும் சோதனையும் இன்பமும் துன்பமும் நிறைந்ததுதான் மானிடவாழ்க்கை. இன்பமும் துன்பமும் வாழ்க்கையின் இரண்டு சக்கரங்கள் இன்பத்தை அனுபவித்த மனமானது துன்ப மொன்று ஏற்படுகின்றபோது அதனை ஏற்றுக் கொள்ள மறுக்கிறது துவண்டு போய் நிற்கிறது.

பந்த பாசத்தோடு பழகிய உறவுகள் பிரிகின்ற போது அதனை மனம் ஏற்றுக் கொள்ள மறுக்கிறது. சகித்துக் கொள்ள முடியாது சஞ்சலப்படுகிறது. இந்த உடம்பு பொய்யுடம்பு என்பதால்தான் இதற்கு மெய் என்று ஒரு பெயர் வைத்திருக்கின்றனர். காதற்ற ஊசியும் வாராது காண் கடைவழிக்கே என்றார் பட்டினத்தார். இதிலிருந்து இந்த பொய்யுலகத்தில் எதுவுமே எமக்குரியது இல்லை. என்பதையே அவர் எடுத்துக் கூறுகிறார். ஆகவே நலம் வாழ வந்த காலமோ ஒரு குறுகியகாலம் அதற்குள் மனிதனாக இருந்து மனித விழுமியப்பண்புகளோடு வாழ்வதே மேலானது. அந்த வரிசையிலே அமரத்துவம் அடைந்த கதிரவேல் இளையதம்பி ஐயா கட்டிய மனையாளுக்கு நல்ல கணவனாகவும் சான்றோராக்கி விட்ட பிள்ளைகளுக்கு நல்லதோர் தந்தையாகவும் சமூகத்தில் நல்ல தொண்டனாகவும் அறப் பணிகளை ஆற்றி வந்த ஓர் அறங்காவலராகவு

பார்க்கின்றோம். அவர் தன்னுடைய மனையாளுக்கு, மக்களுக்கு, சமூகத்திற்கு ஆற்ற வேண்டிய பணிகளை யெல்லாம் ஆற்றி விட்டுத்தான் எம்மையெல்லாம் விட்டுப் பிரிந்து சென்றிருக்கிறார்.

"தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தியிருப்பச் செயல் என்பதற்கொப்ப"

தன்னுடைய ஐந்து பிள்ளைகளையும் நன்றாகப் படிப்பித்து எல்லோரும் அரசாங்க உத்தியோகம் செய்கின்ற அளவுக்கு வளர்த்து விட்ட தந்தையாகவே மழிந்திருக்கிறார். சிவானந்தராசா என்பவர் சிறைசாலை உத்தியோகஷ்த்தராகவும் தெய்வேந்திரராசா லிகிதராக (கிழக்குபல்கலைக் கழகத்திலும்) இந்து மதி சுருக்கெழுத்தாளராக சம்மாந்துறை உயர் நீதி மன்றத்திலும் புனிதராசா என்பவர் உரக் கூட்டுத்தாபனத்திலும் வேலை செய்ய அவருடைய மூன்றாவதுமகள் ஆசிரியையாக மட்/மமே/கொக்கட்டிச்சோலை இராமக்கிருஷ்ண மிஷன் வித்தியாலயமாகிய எமது பாடசாலையிலே இடைநிலைப் பிரிவு மாணவர்களுக்கு கணித பாடம் கற்பிக்கின்ற சிறந்ததோர் ஆசிரியையாக சேவையாற்றிக் கொண்டு இருக்கிறார். தந்தை ஒருவன் தன்னுடைய பிள்ளைகளை எந்த இடத்திற்கு சமூகத்தில் ஆக்க வேண்டுமோ? அந்த இடத்திற்கு அவர்களை ஆக்கி விட்டுச் சென்ற அந்த அப்பாவின் ஆத்மா இறைவனோடு இரண்டறக் கலக்கும் கலக்க வேண்டுமென இறைஞ்சி வேண்டுகின்றோம்.

ஆதியர் ,பிரதி அதியர் ஆசிரியர்கள் கல்விசாரா ஊழியர்கள்
மட்/மமே/ கொக்கட்டிச் சோலை இ.க.ம. வித்தியாலயம்

# கண்ணீர் அஞ்சலி

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 31 |  | 06 |
| 10 | | 05 |
| 1931 | | 2018 |

## அமரர். கதிரவேலு இளையதம்பி

# கண்ணீர் அஞ்சலி

## அமரர். கதிரவேலு இளையதம்பி

மலர்வு :- 31.10.1931 உதிர்வு :- 06.05.2018



# கண்ணீர் அஞ்சலி

தாயின் மடியில் [illegible]

31

10

1931



இறைவன் அடியில் [illegible]

09

[illegible]

2018

[illegible]

மலர்வு

31

10

1931

# கண்ணீர் அஞ்சலி
# அமரர் கதிரவேலு இளையதம்பி



உதிர்வு

கண்ணகை அம்மன் ஆலய பிரதம பூசகர்

# அமரர் கதிரவேலு இளையதம்பி

[illegible] ஆனையம்பதி ஸ்ரீ கந்தசுவாமி ஸ்ரீ கண்ணகை, ஸ்ரீ வீரமாகாளி அம்மன் ஆலயங்களின் பரிபாலன சபையினரின் கண்ணீர் மாலை

பிறப்பு

31.10.1931



இறப்பு

06.05.2018

புவியெங்கும் புகழ்பெற்றிடும் ஆனையம்பதியினிலே
கதிர்வேலு இளையதம்பியாய் கண்மலர்ந்து
நலமுடன் [illegible] வீற்றிருக்கும் கண்ணகை பூசையியற்றி
நாற்பத்திரண்டாண்டு சேவையின் பின் கண் துயின்றார் !

மூல [illegible] மாறாமல் குறையில்லா பூசையாய்
வழுவாது பல்லாண்டு கண்ணகை தொண்டாற்றி
அழகிய தாயடி வீற்றிருந்து பணியாற்றி..
[illegible] நித்தமும் [illegible] ?

முத்தான [illegible] மக்கள் பெற்றார்
[illegible] மின்றெடுத்தார்
உத்தமராய் வாழ்ந்து [illegible]
[illegible] பறந்தார் ?

ஆனந்தம் [illegible]
பார்த்திடும் [illegible]
பக்தர் [illegible]
அன்னையடி [illegible] பூசகரே!

உன்னுடைய [illegible]
உத்தமனே உன் நினைவை [illegible]
ஆலயத் தொண்டர் நாம் அனைவரும் [illegible]
ஆண்டவனை வேண்டுகின்றோம் உன் ஆத்மசாந்தி வேண்டி !

# மரண அறிவித்தல்

பிறப்பு

31

10

1931



இறப்பு

06

05

2018

ஆரையம்பதி 3ம் குறிச்சியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர். கதிரவேலு இளையதம்பி

**(கண்ணகை அம்மன் ஆலய பிரதம பூசகர்)**

**அவர்கள் 06.05.2018 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்**

அன்னார் காலஞ்சென்றவர்களான **கதிரவேலு - தெய்வானை** ஆகியோரின் இளைய புதல்வனும், காலஞ்சென்றவர்களான **முருகேசு - வள்ளம்மா** ஆகியோரின் மருமகனும் **வள்ளியம்மையின்** அன்புக்கணவரும், (காலஞ்சென்ற) **சின்னத்துரை** (வீரமாகாளியம்மன் ஆலய பிரதம பூசகரும், சிறைச்சாலை உத்தியோகத்தர்), **தெய்வேந்திரராஜா** (விரிவுரையாளர், கிழக்குப் பல்கலைக்கழகம்), **கோமதி** (ஆசிரியர், மட்/ கொக்கட்டிச்சோலை இ.கி.மி. மகா வித்தியாலயம்), **இந்துமதி** (சுருக்கெழுத்தாளர் உயர்நீதிமன்றம் சம்மாந்துறை), **புவிதராஜா** (விற்பனை உத்தியோகத்தர் கேலிஸ் உரக் கூட்டுத்தாபனம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், (காலஞ்சென்றவர்களான **சீனித்தம்பி, செல்லநாயகி, ஜோதிநாயகி, சாமித்தம்பி, நேசம்மா, மனோன்மணி** ஆகியோரின் பாசமிகு சகோதரரும், **சாந்தேஸ்வரி, மாலினி,** (விரிவுரையாளர் கிழக்கு பல்கலைக்கழகம்) **விஜயகுமாரன்** (சமுர்த்தி உத்தியோகத்தர்), **பிரகலாதேவி** (அபிவிருத்தி உத்தியோகத்தர்), **சிவயோகம், மங்கையற்கரசி** ஆகியோரின் அன்பு மாமாவும், **திருமஞ்சனம்** (காலஞ்சென்ற) **பெரியசுந்தரம், புஸ்பராணி,** (காலஞ்சென்ற) **சோமநாதன், அமிர்தயோகினி, தயானந்தலோஜினி** ஆகியோரின் சிறிய தந்தையும், (காலஞ்சென்றவர்களான **சீனித்தம்பி, தம்பிப்பிள்ளை, தம்பிராசா, கனகம்மா,** மற்றும் **கணபதிப்பிள்ளை, மஞ்சாட்சரம், மாரிமுத்து, நடராஜா, தவமணிதேவி,** (காலஞ்சென்ற) **ஜெயானந்ததேவி, தியாகராஜா** ஆகியோரின் மச்சானும், **இராசையா, கணேசன்** (காலஞ்சென்ற) **சுந்தரமூர்த்தி, சரோஜாதேவி, தியாகேஸ்வரி, புஸ்பராணி, தேவராணி** ஆகியோரின் உடன்பிறவா சகோதரரும், **டர்ஷிக்கா, டினோஷிக்கா, விஸ்ணுக்கா, சதுர்ஷிதரன், புவேந்திரா, ரதீஸ்வரன், கவியன், வேந்தனா, தருக்ஷேஷன், மோஷிகா** ஆகியோரின் பாட்டனாரும் ஆவார்.

**அன்னாரின் பூதவுடல் (07.05.2018) திங்கட்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் தகனக்கிரியைக்காக ஆரையம்பதி பொது மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.**

தகவல் குடும்பத்தினர்

துர்க்கா அச்சகம். 1ம் குறுக்கு, கொக்குவில், மட்டக்களப்பு. 065 - 2053060

# கண்ணீர் அஞ்சலி

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 31 | | 06 |
| 10 | | 05 |
| 1931 | | 2018 |



## அமரர். கதிரவேலு இளையதம்பி

செல்வர் என்று அன்போடு ஊரார் அழைக்கவந்த
செல்வமான எங்கள் இளையதம்பி மாமாவே!
கன்னகையோடு கண்ணகி அம்மனின் பக்திக் கனவோடு
வலம் வந்தாய் மாமா! எங்கள் குடும்ப ஒளிவிளக்காய்
பிரகாசித்தாய்!

பொல்லாத இவ்வுலகில் பொறுமையோடு வாழ்ந்திருந்து
பல்லோரும் போற்ற கண்ணகி அம்மன் பூசாரியாய்
அருள் தந்தாய்!
நல்லவராய் வாழ்ந்து எங்கள் அனைவர்க்கும் வழிகாட்டியாய் நின்றாய்
நலிவற்ற வாழ்வு நீங்கி அம்மன் இருப்பிடம் போறீரோ?

குடும்ப நலன் காத்தாய்! எங்கள் குடியாரின் வருகைக்கு வித்தானாய்
கற்றவராய் புராண இதிகாசம் புரிந்தவராய்
அருகிருக்கும் பக்தியோடு பாடி பொருள் சொன்ன
உங்கள் அப்பா கதிரவேலரின் புலமையை உள்வாங்கினாய்!

ஒப்பில்லா பூசகரோடு கண்ணகி அம்மன் பூசகராய்க் கடமை செய்து
எல்லோருக்கும் பக்தியோடு தரிசிக்க காட்டாயினார்
சின்னத்துரையரின் தம்பியே

எங்கள் குடும்பத்தார் குடியாரின் வீடெல்லாம் சென்று
ஆறுதல் அளிப்பாய்! அன்பு மழையைப் பொழிவாய்
தங்க மனிதராய் நாளாரின் சடங்கு காலத்தில்
தூங்காது விழித்திருந்த தூய பூசாரியாய் ஒளிவிட்டாய்
பூங்காற்றாய் பறந்திடுவாய் கதவு திறக்கும் நேரம் அம்மன்
சிலையோடு

பக்தியோடு நினைவிழந்து வருகின்ற அற்புத நேரத்தில்
ஓய்வில்லாத உணர்வோடு மஞ்சள் நீரால் கால்கழுவி
அருள்பெறுவாய்! அந்த உத்தமரே எங்கே பறந்து போனீர்

எங்கும் தூயமனம் கொண்ட பூசாரி இளையதம்பி மாமாவே!
அருள்தாயின் சடங்கு எட்டுப்பார்க்கும் வேளையில்
பொங்கு கடல் ஓய் ஓய்ந்தது போல் மறைந்துவிட்டீர்!
போனவருடம் சடங்கில் கூட அன்னை திருத்தலத்தில்
வந்திருந்து
இங்கு புகழ் அம்மனின் பதியை தரிசித்து மகிழ்ந்து நின்றாய்
வாழையடி வாழையாக அம்மனுக்குப் பூசை செய்யும்
குடியில் உதித்தவரே

தங்காது தாங்காது உங்கள் மறைவு! அன்புள்ள மாமா
தூயமனம் கொண்ட எங்கள் குடியாரும் குடும்பத்தாரும்
கண்ணீர் அஞ்சலி செலுத்தி விடைபெறுகிறோம்

**பொன்னாச்சி குடி மக்கள்,**
**ஆரையம்பதி**



அமரர். கதிரவேலு இளையதம்பி


துயர் பகிர்கின்றோம்
இறைபதம் அடைந்த அன்னாரின் ஆத்ம
சாந்திக்காக பிரார்த்திப்பதுடன், அன்னாரின் பிரிவால்
துயருறும் குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்


துயர் பகிர்கின்றோம்
கல்லறையில் நிம்மதி தேடி காற்றோடு கலந்து விட்டீர் உன்
கனவுகள் எல்லாம் கானல் நீராய் கண்ணீர் மட்டும் நிரந்தரமாய்!
கருவறையில் இருந்து இறங்கி கல்லறை நோக்கி
நடந்து செல்லும் தூரம் தான் வாழ்க்கை
அன்னாரது பிரிவினால் துயருறும் குடும்பத்தினர் மற்றும்
உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும்
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
ஸ்ரீ சித்தி விநாயகர், ஸ்ரீ பேச்சியம்மன் ஆலய பரிபாலன சபை, ஆரையம்பதி.





# விழிநீர் அஞ்சலி

மாணிக்க முத்து வயிரம் பணிபூண்டு
ஆணிப்பொன் சிங்காசனத்திலிருந்தாலும்
காணித்துடலை யெமன் கட்டியே கைபிடித்தால்
காணிப்பொன் கூடவரக் காண்கிலேமே நெஞ்ச


அமரத்துவமடைந்த அன்னாரது
ஆத்மா சாந்தி பெற இறைவனை வேண்டுகிறோம்

# வம்ச விருட்சம்


கதிரவேலு + தெய்வானை
முருகேசு + பொன்னம்மா
சீனித்தம்பி
செல்வநாயகி
இளையதம்பி
வள்ளியம்மை
கணபதிப்பிள்ளை
பஞ்சாட்சரம்
மாரிமுத்து
நடராசா
தவமணிதேவி
ஜெயானந்தவி
தியாகராசா
கிருபைராசா
சிவானந்தராசா
+
சாந்தேஷ்வரி
தர்ஷிக்கா
நிலோஜிக்கா
விஷ்னுகா
சதூர்ஷிகன்
புவேந்திரா
தெய்வேந்திரராசா
+
மாலினி
ரதீஸ்வன்
சுஜிவன்
வேந்தனா
கோமதி
இந்துமதி
+
விஜயகுமார்
தருகேஷன்
புனிதராசா
+
பிரகலாதேவி
மோஷிக்ஹா

# நன்றி நவிலல்


கடந்த 06.05.2018ம் திகதி அன்று அமரராகிவிட்ட எம்
இல்லத்தின் தலைவன் கதிரவேலு - இளையதம்பி
அவர்களின் மரணச் செய்தி கேட்டு உடன் ஓடோடி வந்து
உதவிய அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் உற்றார்
உறவினர்களுக்கும் நேரிலும் மற்றும் தொடர்பு ஊடகங்கள்
மூலம் எம்மோடு துயர் பகிர்ந்து அனுதாபச் செய்திகள் தந்தும்
கண்ணீர் அஞ்சலி செலுத்தி விளம்பரங்கள் - பதாதைகள்
அச்சிட்டும் அனுதாபம் தெரிவித்து உதவிய அனைவருக்கும்
குறிப்பாக அன்னாரின் இறுதி ஊர்வலத்தின்
முன்பாக இரங்கல் உரை ஏற்பாடு ஒன்றினை ஒழுங்கு படுத்தி
சிறப்பாக செய்துவைத்த ஏற்பாட்டுக் குழுவினருக்கும்
ஆலயங்களின் அறங்காவல் சபையினருக்கும் ஆலய பாகை
சார்ந்த உறுப்பினர்களுக்கும் குழவளி உறுப்பினர்களுக்கும்
மற்றம் ஏனையோர்க்கும் நன்றியை தெரிவித்துக் கொள்வதுடன்
மேலும் 31ம் நாள் நினைவு மலர் வெளியீட்டிருக்கான
ஆக்கங்களை தந்துதவிய மரியாதைக்குரியவர்களுக்கும் மலர்
வெளியீட்டினை சிறப்பாக வடிவமைத்து தந்து
"துர்கா" ஸ்தாபனத்தாருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.



**இவ்வண்ணம்**

**குடும்பத்தினர்**

# கீதாசாரம்



எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்
உன்னுடையது எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு
எதை நீ படைத்திருக்கிறாய்?
அது வீணாகுவதற்கு
எதை நீ எடுத்துக்கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது
எதைக் கொடுத்தாயோ
அது இங்கிருந்தே கொடுக்கப்பட்டது
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது
மற்றொரு நாள் அது,
வேறொருவருடையதாகும்.
இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாரம்சமாகும்.

– பகவான் ஸ்ரீ கிருஸ்ணர் –

துர்க்கா அச்சகம்
கொக்குவில்,மட்டக்களப்பு 0652053060